இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 33 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 25 – திங்கள்கிழமை 11 செப்டம்பர் 2023 – கோவை ★ ★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 33 : Thiruvalluvar Year - 2054 - Aavani 25 - Monday 11 September 2023 - Kovai ★★ 10 Pages ₹ 5.00

## ஜி.20 மாநாடு: இந்திய குடியரசுத் தலைவர் ஏற்பாடு!

# உலகத் தலைவர்களுக்கு விருந்து! முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்!

## புதுடெல்லியில் கழக எம்.பி.க்கள் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!



புதுதில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டினையொட்டி, இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் 9.9.2023 அன்று அளித்த விருந்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டபோது, அமெரிக்க நாட்டின் அதிபர் ஜோ பைடன் அவர்களை சந்தித்து பேசினார். இந்நிகழ்வின்போது பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**புதுடெல்லி, செப். 11 -**

**புதுடெல்லியில் நடைபெறும் ஜி 20 மாநாட்டில் பங்கேற்க வந்த உலகத் தலைவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் நேற்று விருந்து அளித்தார். அவரது அழைப்பின் பேரில் புது டெல்லி சென்ற முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அந்த விருந்தில் பங்கேற்றார்.**

**முன்னதாக புதுடெல்லி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழகப் பொருளாரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.**

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஐரோப்பிய யூனியன், சீனா, இந்தியா, ஜப்பான், சவூதி அரேபியா உள்ளிட்ட 20 நாடுகளை கொண்ட ஜி20 அமைப்பின் 18வது உச்சி மாநாடு டெல்லியில் நடைபெறுகிறது. பல்வேறு காரணங்களுக்காக ரஷ்ய அதிபர் புதின், சீன அதிபர் ஜின்பிங் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

டெல்லி பாரத் மண்டபத்தில் ஜி20 மாநாடு தொடங்கி நடைபெற்றுவருகிறது. அமெரிக்க அதிபர் ஜோபைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆஸ்திரேலிய பிரதமர் அன்டோனி அல்பானிஸ், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, ஜப்பான் பிரதமர் Fumio Kishida, துருக்கி அதிபர் எர்டோகன், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யன் உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்ற கருப்பொருளுடன் ஜி 20 மாநாடு நடைபெற்று வருகிறது. ஜி20 நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பல்வேறு துறைகளில் இந்நாடுகள் அனைத்தும் இணைந்து செயல்படுவது, பருவநிலைமாற்றம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது. ரஷ்யா உக்ரைன் போர் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் எரிசக்தி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழலில், இந்த ஒப்பந்தம் குறித்து ஜி20 மாநாட்டில் உறுதியான முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் டெல்லி வருகை தந்தார்!**

இந்நிலையில் ஜி 20 மாநாட்டுக்கு வருகை தந்துள்ள உலகத் தலைவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருந்தளித்து சிறப்பித்தார்.

இந்நிலையில், விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்க ஒன்றிய அமைச்சர்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உட்பட அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்திருந்தார்.

குடியரசுத் தலைவரின் அழைப்பை ஏற்று நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில்இருந்துவிமானம்மூலம் நேற்று காலை டெல்லி சென்றடைந்தார். முன்னதாக சென்னை விமான நிலையத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயரதிகாரிகள் மற்றும் தி.மு க. நிர்வாகிகள் முதலமைச்சரை வழியனுப்பி வைத்தனர்.

புதுடெல்லி வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமானநிலையத்தில் கழகப்பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவருமானடி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

---

### ஜி 20 விருந்துக்கு கார்கேவுக்கு அழைப்பு இல்லை

## எதிர்க்கட்சி தலைவர்களை பா.ஜ அரசு மதிப்பதில்லை!

### ராகுல்காந்தி குற்றச்சாட்டு



லண்டன், செப்.11-

இந்தியாவில் ஜனநாயக அமைப்புகள் மீது முழு அளவில் தாக்குதல் நடப்பதாக குறிப்பிட்ட ராகுல்காந்தி, ஜி 20 விருந்துக்கு கார்கேவை அழைக்காதது எதிர்க்கட்சி தலைவர்களை பா.ஜ அரசு மதிப்பதில்லை என்பதை காட்டுவதாக குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி 5 நாட்கள் பயணமாக ஐரோப்பாவுக்கு சென்றுள்ளார். அவரது இந்த வெளிநாட்டுப் பயணம் இந்திய அயலக காங்கிரஸ் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ராகுல் காந்தி நேற்று முன்தினம் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரசல்ஸ் நகருக்கு சென்றடைந்துள்ளார். அங்கு ஐரோப்பிய ஆணைய எம்.பி.க்களை சந்தித்து பேசினார். அதன்பின் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு ராகுல்காந்தி பதில் அளித்து கூறியதாவது:

இந்தியாவில் ஜனநாயக அமைப்புகள் மீது முழு அளவிலான தாக்குதல் நடைபெற்று வருகிறது. நாட்டின் ஜனநாயக கட்டமைப்புகளை நசுக்கும் இந்த முயற்சி குறித்து ஐரோப்பிய யூனியன் நாடுகள் கவலையில் உள்ளன. ஜி 20 உச்சி மாநாட்டை இந்தியா தலைமை ஏற்று நடத்துவது மிகவும் நல்ல விஷயம். இந்தியா ஒரு பெரிய நாடு. ஒரு பெரிய நாடாக இருப்பதால், அது பல நாடுகளுடன் உறவுகளைக் கொண்டிருக்கும். எனவே இது ஒரு சாதாரண விஷயம். எவருடன் வேண்டுமானாலும் உறவு வைத்துக் கொள்ள இந்தியாவுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் ஜி20 இரவு விருந்துக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவிற்கு அழைப்புஇல்லை. மேலும் பல்வேறு எதிர்க்கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு இல்லை. அவர்கள் இந்தியாவின் 60 சதவீத மக்கள்தொகையின் தலைவர்கள்.

அவர்களை அழைக்காதது ஒன்றிய அரசு அவர்களை மதிப்பதில்லை என்பதைத் தான் காட்டுகிறது. அரசின் செயல் அதன் சிந்தனையைப் பற்றி கூறுகிறது. அதன் மூலம் இந்தியாவின் 60 சதவீத மக்களின் தலைவர்களை அவர்கள் மதிப்பதில்லை என்பதைத் தான் இந்த அரசு உங்களுக்கு சொல்கிறது. அதனால் தான் எதிர்க்கட்சித் தலைவரை (மல்லிகார்ஜுன் கார்கே) அழைக்க வேண்டாம் என்று அவர்கள் முடிவெடுத்துள்ளனர். அதன் பின்னால் என்ன வகையான சிந்தனை இருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். இந்தியாவில் பாகுபாடு மற்றும் வன்முறை அதிகரித்து வருகிறது. நம் நாட்டின் ஜனநாயக அமைப்புகள் மீது முழு அளவிலான தாக்குதல் உள்ளது. இது அனைவருக்கும் தெரியும். நான் அரசை விமர்சனம் செய்வதால் அவர்கள் மிகவும் கவலையடைந்தனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

**சிறுபான்மையினர் மீது தாக்குதல்**

ராகுல்காந்தி கூறும் போது,' இந்தியாவில் சிறுபான்மையினர் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல பல சமூகங்களும் தாக்கப்படுகின்றன. தலித் சமூகங்கள், பழங்குடி சமூகங்கள், தாழ்த்தப்பட்ட சமூகங்கள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. நாட்டின் தன்மையை மாற்ற முயற்சி நடக்கிறது. மணிப்பூரில் நடந்த கலவரமும் அப்படிப்பட்ட ஒன்றுதான். காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. அதில் யாரும் தலையிட முடியாது. ரஷ்யா உக்ரைன் மோதலில் இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டை அனைத்து எதிர்க்கட்சிகளும் எந்தவித பேதமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளும். நாங்கள் ரஷ்யாவுடன் உறவு வைத்திருக்கிறோம்' என்று அவர் கூறினார்.

**இந்திய ஒற்றுமை யாத்திரை**

ராகுல் கூறும்போது,' இந்தியா முழுவதும் சுமார் 4,000 கிமீ நீளமுள்ள இந்திய ஒற்றுமை யாத்திரையை நான் மேற்கொண்டேன். இந்த யாத்திரை தான் மக்களுடன் என்னை நெருக்கமாகக் கொண்டு வந்தது. அவர்களின் குரல் அரசிடம் எடுபட வேண்டும். அங்குதான் பா.ஜ.வுக்கும் எங்களுக்கும் அடிப்படை வேறுபாடு உள்ளது. நாங்கள் மக்களின் குரலுக்கு மதிப்பளிக்கிறோம். ஏழைகளின் குரலுக்கு மதிப்பளிக்கிறோம், அனைவரின் குரலையும் மதிக்கிறோம், நாங்கள் முடிவுகளை எடுப்பதற்கு முன் அனைவருடன் உரையாட விரும்புகிறோம்' என்றார்.

---

### ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம்

## மாநில அரசுகளை பலவீனப்படுத்த பா.ஜ.க. திட்டம்!

### ப.சிதம்பரம் குற்றச்சாட்டு!

காரைக்குடி, செப். 11 -

``இந்தியா கூட்டணிக்கு அகில இந்திய அளவில் தொகுதி பங்கீடு கிடையாது. மாநில அளவில் தான் தொகுதி பங்கீடு. இந்தியா கூட்டணியில் 14 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு கூடி தேர்தல் வியூகங்களை வகுப்பார்கள்'' என முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

காரைக்குடியில் செய்தியாளர்களை சந்தித்த அவர், “இந்தியா ஜனநாயகமும், எதிர்க்கட்சியும் இல்லாத நாடாக மாறிவிடுமோ என்ற அச்சம் எழுகிறது. இந்தியா அல்லது பாரதம் என்பது மாநிலங்கள் அடங்கிய ஒன்றியம் என்று தான் அரசியல் சாசனத்தில் உள்ளது. இந்நிலையில் பாஜகவின் நோக்கம் என்னவென்று புரியவில்லை.

ஜி 20 மாநாடு அழைப்பிதழில் ஆங்கிலத்தில் இந்தியா என்றும் ஹிந்தியில் பாரத் என்றும் எழுதலாம். நாங்கள் பாரதத்திற்கு விரோதி அல்ல. ஆனால் பாஜக இந்தியாவை விரோதியாக பார்க்கிறது.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதை செயல்படுத்த அரசியல் சாசனத்தில் குறைந்த பட்சம் 5 திருத்தங்களை செய்ய வேண்டும். மாநில அரசுகளை பலவீனப்படுத்தவே ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற கோட்பாட்டை பா.ஜ.க. எடுத்துள்ளது.

எம்மதமும் சம்மதம் என்பதுதான் காங்கிரசின் கொள்கை. நாங்கள் சர்ச்சையில் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை. இந்தியா கூட்டணிக்கு அகில இந்திய அளவில் தொகுதி பங்கீடு கிடையாது. மாநில அளவில் தான் தொகுதி பங்கீடு. இந்தியா கூட்டணியில் 14 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு கூடி தேர்தல் வியூகங்களை வகுப்பார்கள்.

வடநாட்டில் சனாதனம் என்பது இந்து மதம் தான். தமிழகத்தில் சனாதனம் என்பது ஜாதிய வாதம், பெண் இழிவு என்றும் வடநாட்டில் இந்து மதம் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. நாம் பேசுவது வேறு, அவர்கள் புரிந்து கொள்வது வேறு. ஆதலால் சர்ச்சை ஏற்படுகிறது'' என தெரிவித்தார்.

---

### 2 நாட்கள் நடைபெறுகிறது!

## டெல்லியில் ஜி-20 மாநாடு தொடங்கியது!

புதுடெல்லி, செப். 11 -

டெல்லியில் 2 நாள் நடைபெற உள்ள ஜி20 மாநாடு தொடங்கியது. டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். 2 நாள் ஜி20 மாநாடு பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் தொடங்கியது. பிரதமரின் நாட்டை குறிக்கும் இடத்தில் இந்தியா என்பதற்குப் பதிலாக பாரத் என இடம் பெற்றுள்ளது.

ஜி20 மாநாட்டின் முதல் அமர்வில் காலநிலை பற்றி விவாதிக்கப்படும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் அமர்வு முடிந்தவுடன் உலகத் தலைவர்களுக்கு மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் மோடி விருந்தளிக்கிறார்.

ஜி20 மாநாட்டு தலைவர்களை வரவேற்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். மொராக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜி20 மாநாட்டில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. தற்போதைய சூழலில் மனிதநேய அடிப்படையிலான நடவடிக்கைகள் தேவை என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இந்தியா தலைமை தாங்கும் ஜி20 மாநாடு டெல்லியில் நேற்று பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் தொடங்கியது. இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் பொருளாதாரம் மேம்பாடு, காலநிலை மாற்றம், எரிசக்தி விவகாரம் , சர்வதேச கடன் கட்டமைப்பு, சீர்திருத்தம், கிரிப்டோ கரன்சி மீதான கட்டுப்பாடு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படுகிறது.



ஜி20 மாநாடு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காகஅமெரிக்க அதிபர் ஜோ பைடன் விமான மூலம் இந்தியா வந்தடைந்தார். அதிபர் ஜோ பைடனை ஒன்றிய இணை அமைச்சர் வி.கே. சிங் வரவேற்றார். அவருக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் ஜோ பைடன் சந்தித்து பேசினார். இந்தியா வந்துள்ள ஜி20 தலைவர்களுக்கு நேற்று முன்தினம் இரவு சுவையான இந்திய சைவ உணவு பரிமாறப்பட்டது. ஜி20 மாநாடு இந்தியாவில் நடைபெறும் நிலையில் தொழில்நுட்ப முன்னேற்றம், உட்கட்டமைப்பு, மனிதவளம் போன்றவற்றை சர்வதேச நாடுகள் அறிந்து கொள்ள இது மிகச்சிறந்த நல்வாய்ப்பாக அமையும் என்று கூறப்படுகிறது.

---

## மொராக்கோ நிலநடுக்கம்: 1,037 பேர் உயிரிழப்பு!

ரபாத், செப். 11 -

வட ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான மொராக்கோவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 1,037 பேர் உயிரிழந்துவிட்டதாக அந்நாட்டு உள்துறை தெரிவித்துள்ளது.

மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவாகியுள்ளது.

மராகேஷுக்கு தென்மேற்கே 71 கிமீ (44 மைல்) தொலைவில் உள்ள ஹை அட்லஸ் மலைகளில் 18.5 கிமீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி 23:11 மணிக்கு (இந்திய நேரப்படி அதிகாலை 3:40) நிலநடுக்கம் ஏற்பட்டது. அதை தொடர்ந்து, 19 நிமிடங்களுக்குப் பிறகு 4.9 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

மரக்கேஷ் மற்றும் தெற்கில் பல பகுதிகளில் மக்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்தாலி, கிரீஸ், துருக்கி ஆகிய பகுதிகளில்தான் பெரும்பாலான நிலநடுக்க நிகழ்வுகள் நடக்கின்றன. இந்த நிலநடுக்கம் அட்லஸ் மலைத்தொடரைத் தொடர்ந்து மேல்நோக்கித் தள்ளும் உந்துதலுடன் தொடர்புடையதாக இருக்கும்.

வரலாற்று அடிப்படையில், 1900ஆம் ஆண்டுக்கு முன்பு வெள்ளிக்கிழமை இரவு நடந்த நிலநடுக்கத்தில் இருந்து 500கி.மீ தொலைவில் 6.0 அளவைவிடப் பெரிய நிலநடுக்கம் எதுவும் பதிவாகவில்லை.

இத்தகைய தன்மை விளைவுகளை ஏற்படுத்துகிறது. மக்களிடையே நிலநடுக்கம் பற்றிய நினைவுகள் குறைவாக இருக்கும். தயார் நிலை நடவடிக்கைகளும் குறைவாக இருக்கும். இடிந்து விழும் கட்டடங்களுக்குள் மக்கள் அதிகமாக இருப்பதால், இரவில் ஏற்படும் நிலநடுக்கங்கள் பெரியளவிலான பலி எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறது. இந்த நிலநடுக்கம் உள்ளூர் நேரப்படி 11 : 11 மணிக்கு ஏற்பட்டது. அப்போது பெரும்பாலான மக்கள் தொகை உறக்கத்தில் இருக்கும்.

அமெரிக்க நிலவியல் ஆய்வகம், மரணங்கள் மற்றும் பொருளாதார இழப்புகளின் சாத்தியமான அளவை மதிப்பிடும் மாதிரியை வைத்துள்ளது. அதன் பகுப்பாய்வுப்படி, இந்த நிகழ்வில் பலி எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் இருந்து குறைந்தது ஆயிரங்களில் இருக்கலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அட்லஸ் மலைத்தொடரில் உள்ள தொலைதூர கிராமங்களுக்கு செல்வதில் பெரும் சிரமம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக பழைய கட்டடங்களால் ஆன கிராமங்களுக்கு மீட்புப் படையினர் செல்ல சில நாட்கள் ஆகலாம்.பட மூலாதாரம், REUTERS

மொராக்கோ கடற்கரையில் உள்ள கேனரி தீவுகள் மற்றும் அதன் கிழக்கு அண்டை நாடான அல்ஜீரியாவில் உள்ள மக்கள் கூட நிலநடுக்கத்தை உணர்ந்ததாக கூறுகிறார்கள்.

அதிர்ச்சியடைந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி மராகேஷின் தெருக்களில் தப்பிச் செல்லும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவியிருக்கின்றன.

நகரின் பழமையான சுவர்களும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

ட்விட்டர் சமூக ஊடகத்தில் நிலநடுக்கம் தொடர்பாக உறுதிப்படுத்தாத வீடியோ கிளிப்புகள் காணப்படுகின்றன. அதில், சேதமடைந்த கட்டிடங்கள், கட்டிடங்கள் குலுங்குவது, இடிபாடுகளுடன் கூடிய தெருக்கள் இடம்பெற்றுள்ளன.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.9.2023) எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.எம்.வீரப்பன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார். உடன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் ஆகியோர் உள்ளனர்.

## சென்னையில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப்.11-

கோவை மற்றும் நீலகிரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. சென்னைவானிலை ஆய்வுமையம்வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி,மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### நூறு ஆண்டுகள் கடந்தும் வாழ

# அண்ணன் ஆர்.எம்.வீ.யை நெஞ்சார வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, செப்.11-**


**“நூறு ஆண்டுகள் கடந்தும் முழு நலத்துடன் வாழ அண்ணன் ஆர்.எம்.வீ. அவர்களை நெஞ்சார வாழ்த்துகிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டிருப்பதாவது:-

எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முத்தமிழறிஞர் கலைஞர் மீது அளவற்ற மதிப்பும், அன்பும் கொண்ட வருமான அண்ணன் ஆர்.எம்.வீரப்பன் அவர்களுக்கு 98ஆவது பிறந்தநாள் வாழ்த்துகள்!

நம் பாசத்திற்குரிய ஆர்.எம்.வீ. அவர்கள் நூறு ஆண்டுகள் கடந்தும் முழு நலத்துடன் வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் கூறியுள்ளார்.



புதுடெல்லியில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டினையொட்டி குடியரசுத் தலைவர் அளிக்கவுள்ள விருந்தில் அழைப்பின்பேரில் கலந்து கொள்வதற்காக புதுடெல்லிக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.9.2023) விமான நிலையத்தில், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வரவேற்றனர்.



திருச்சியில் 55வது வார்டுக்கு உட்பட்ட ஆலங்குளம் பகுதியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு ரூ.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கட்டிடத்தை மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், கதிரவன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்டச் செயலாளர் வைரமணி, டோல்கேட் சுப்பிரமணி, சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, பகுதிச் செயலாளர் மோகன் தாஸ், கோட்ட தலைவர் விஜயலட்சுமி கண்ணன், கவுன்சிலர் காஜாமலை, விஜி ராமதாஸ், கிராப்பட்டி செல்வம், புஷ்பராஜ், பந்தல் ராமு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர்கள்– துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை ராயப்பேட்டை புதுக்கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் நீர்வளத் துறை அமைச்சர் – கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., துணை செயலாளர்கள் பொன்.கௌதம சிகாமணி எம்.பி, எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி, மாவட்ட செயலாளர் சிற்றரசு, மதன்மோகன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப் பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை ராயப்பேட்டை புதுக்கல்லூரி கலையரங்கத்தில் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் அதன் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. நினைவுப் பரிசு வழங்கினார். இதில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, அணி துணைச் செயலாளர்கள் பொன். கௌதம சிகாமணி எம்.பி, எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி, மாவட்ட செயலாளர் சிற்றரசு, மதன்மோகன் மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## விளையாட்டுப் போட்டிகள் மூலம்

# கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பீர்!

## விளையாட்டு மேம்பாட்டு அணியினருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, செப். 11 -

**விளையாட்டுப் போட்டிகளை விளையாட்டுப் போட்டிகளாக மட்டும் கருதாமல் கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நல்ல வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தி பேசினார்.**

கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் பேசியதாவது:-

இந்த விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முதல் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் மற்றும் கழகத் தலைவர் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதாக இருந்தது. நம்முடைய அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் சொன்னது போல, அவரிடம் முதலில் தேதி வாங்கிய பிறகு தான் எங்களிடம் தேதி வாங்கினார். இருந்தாலும், தவிர்க்கமுடியாத காரணங்களால் டெல்லிக்குச் செல்வதால் நம்முடைய தலைவர் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடிய வில்லை. இருந்தாலும் ஒட்டுமொத்த தலைமைக்கழகமே, நம்முடைய கழகத்துடைய பொதுச் செயலாளர், அனைத்து அமைச்சர்கள், அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்கள், அணியின் செயலாளராக நான் கலந்து கொண்டிருக்கிறோம்.

இருந்தாலும் தலைவராக அங்கே இருந்தாலும் அவருடைய மனம் முழுவதும் இந்தக் கூட்டத்தில்தான் இருக்கும். இங்கே சிறப்பாக நடந்துக்கொண்டு இருக்கிறதா, என மனம் முழுவதும் அதைத்தான் யோசித்துக் கொண்டிருப்பார்.

இன்னும் சொல்லப்போனால், எனக்குக் கொஞ்சம் பொறாமையாகவே இருந்தது. எஸ்.ஆர்.பார்த்திபன் தலைவருடைய வாழ்த்துச் செய்தியை படித்தார். இவ்வளவு பெரிய வாழ்த்துச் செய்தி இதுவரைக்கும் தலைவர் அவர்கள் எந்த அணிக்கும் கொடுத்தது கிடையாது. நம்முடைய பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் கூட, `என்னப்பா ரொம்ப நேரம் படித்துக் கொண்டிருக்கிறார் வாழ்த்துச் செய்தியை' எனக் கேட்டார்.

`ஆமாம். மாமா… தலைவர் வரவில்லையல்லவா, இவ்வளவு பெரிய வாழ்த்துச் செய்தி புது அணி அல்லவா, அதனால் பெரிய வாழ்த்துச் செய்தியைக் கொடுத்திருக்கிறார். வாழ்த்துச் செய்தி என்றால், வெறும் வாழ்த்து மட்டும் அல்ல. அந்த அளவுக்கு உங்களிடம் எதிர்பார்ப்பும், உங்களுக்குப் பொறுப்பும் இருக்கிறது. அதை நீங்கள் முழுமையாக உணர்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் தலைவர் தலைமையில், மூன்று மாதங்களுக்கு முன்பு அறிவாலயத்தில் நடந்தது. இளைஞர் அணியின் செயலாளராக நான் அதில் பங்கேற்றேன். அதன்பிறகு, நான் கலந்து கொண்ட கழகத்தினுடைய வேறு ஒரு அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் கூட்டம் என்றால், அது இந்த விளையாட்டுத் துறையின் `விளையாட்டு மேம்பாட்டு அணி'யின் இந்தக் கூட்டம் தான். இந்த வாய்ப்பை வழங்கிய, நம்முடைய விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் அண்ணன் திரு.தயாநிதி மாறன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவருக்கு வயது ஐம்பத்தைந்தா, ஐம்பத்தாறா நான் குறைவாகச் சொன்னாலும் நீங்கள் உண்மையைச் சொல்லுங்கள். யாராவது நம்புவார்களா? அவருக்கு 56 வயது என்றால், அதனால்தான் தலைவர் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டு அணியின் தலைவராக அவரை அறிவித்திருக்கிறார். அந்த அளவு பிட்டாக இருக்கிறார்.

இங்கு இருக்கும் எல்லோருக்கும் தெரியும் நான் எந்த நிகழ்ச்சிக்குப் போ னாலும் அங்கு ஏதாவது சாப்பிடக் கொடுப்பார்கள். ஆய்வுக் கூட்டம், ஏதாவது ஒரு நிகழ்ச்சி என்றால் டீ, காபியாவது தருவார்கள், பிஸ்கட் டீ காபி… தொடவே மாட்டார். அவரைப் பார்த்தால் யாராலும் சொல்ல முடியாது ஐம்பதாறு வயதென்று. உங்கள் வயதைக் கம்மி பண்ணினால், என் வயசு கம்மியாகும் அல்லவா?

என்னைத் தூக்கி வளர்த்தவர். நான் இந்த அளவிற்கு இங்கே நிற்கிறேன் என்றால், ஒரு அண்ணனாக என் கூடவே நின்றவர். இன்றைக்கும் என்னை வழி நடத்துபவர் என்றால், நம்முடைய அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள்தான்.

அவர் இந்த விளையாட்டு மேம்பாட்டு அணியின் தலைவராக உங்களை எல்லாம் வழிநடத்தப் போகிறார். அதற்கு இந்த நேரத்திலே என்னுடைய வாழ்த்துகள். புது அணி. ஆனால், மிகவும் பொறுப்பு வாய்ந்த அணி. நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அது நீங்களெல்லாம் புரிந்துகொண்டு இந்தக் கழகப் பணியில், இந்தத் துறையின் பணியில் ஈடுபடுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கு அண்ணன் தயாநிதி மாறன் சொன்னதைபோல், எனக்கும் இந்த அணிக்கும் நிறைய தொடர்பு உண்டு. என்னுடைய பிறந்தநாள் அன்றுதான் இந்த விளையாட்டு மேம்பாட்டு அணியின் பிறந்தநாளும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விளையாட்டு மேம்பாட்டு அணியை நவம்பர் 27 ஆம் தேதி 2022 . என்னுடைய பிறந்தநாள் அன்றுதான் துவங்கி வைத்தார்கள்.

அது மட்டுமல்லாமல், இந்த அணியின் முதல் விளையாட்டுப் போட்டியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் மார்ச் 1 ஆம் தேதியன்று நான் தொடங்கி வைத்தேன்.

மகளிருக்கான கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள் மிகவும் பிரமிப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தன. வெளியில் வந்து எத்தனை நிகழ்ச்சிகள் நடத்தினீர்கள்? வெறும் ஒன்பதே மாதங்களில் எவ்வளவு நிகழ்ச்சி நடத்தி இருக்கிறீர்கள் என்றால், அது உங்களுடைய துடிப்பான செயல்பாடு அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

இளைஞர் அணியே பார்த்துப் பொறாமைப்படும் அளவிற்கு, நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய அமைப்பாளர்கள், செயலாளர்கள் அவர் தெளிவாக ஒன்று சொன்னார் நீங்கள் கவனித்தீர்களா என்று தெரியவில்லை.

இந்த விளையாட்டு மேம்பாட்டு அணியின் தலைவர் நான் என்று சொல்லிவிட்டார். பந்தைத் தூக்கி என்னிடம் போட்டுவிட்டார். ஏனென்றால், அவருக்குத் தெரியும். இந்த அணியின் செயலாளர் அவர். அதனாலதான் தலைவர் பதவியை என் கிட்ட கொடுத்திருக்கிறார்.

இப்படி இன்னும் சொல்ல போனால் இந்த அணி நடத்தியிருக்கக்கூடிய நிறைய நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பார்த்தீர்களென்றால் விளையாட்டு மேம்பாட்டு அணி என்பதால், ஒவ்வொரு நிகழ்ச்சியும் வெட்ட வெயிலில், உச்சிவெயிலில் நடத்தியிருக்கிறார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும்போது நான் சொல்லுவேன், இவ்வளவு செல்வச் செழிப்பான அணி, வசதியான அணியாக இருந்தாலும் எங்களை எல்லாம் அழைத்து வந்து இந்த உச்சிவெயிலில், வெட்ட வெளியில் நிகழ்ச்சி நடத்தி இருக்கிறீர்கள். ஒரு கூரையாவது போட்டு இருக்க வேண்டாமா என்று கேட்பேன். ஆனால், இந்த நிகழ்ச்சி மட்டும் நம்முடைய பொதுச் செயலாளர் வந்திருக்கிறார் என்பதற்காக, ஏ.சி ஹால் எல்லாம் புக் பண்ணி உங்களுக்காகத்தான் இந்த நிகழ்ச்சி.

இப்படித் தொடர்ச்சியாக இந்த விளையாட்டு மேம்பாட்டு அணி சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருவதில் நான் பெருமை அடைகின்றேன் மகிழ்ச்சி அடைகின்றேன். இன்னும் சொல்லப்போனால், இளைஞர் அணி நிகழ்ச்சிகளுக்கு அடுத்தபடியாக இந்த அணியின் நிகழ்ச்சிகளில்தான் நான் அதிகமாகக் கலந்து கொண்டிருக்கிறேன்.

அதேபோல் இங்கு இந்த மேடையில் விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பாக, இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற இருக்கின்றது. அதற்கு முதற்கட்டமாக மாநாட்டு நிதி அளித்திருக்கிறார்கள் ரூ.10 இலட்சம். அதற்கு முதல்கட்டமாக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வலிமையான அணியாக உருவாக வேண்டும்!**

அண்ணன் தயாநிதிமாறன் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டு அணிக்கு செயலாளர் ஒரு இளைஞரை போலத் தினம் தினம் ஓடி ஓடி இந்தப் பணிகளை எல்லாம் மேற்கொண்டு வருகின்றார்.

மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்திருக்கிறார். அவரைப் போலவே விளையாட்டு மேம்பாட்டு அணியும் மிகவும் துடிப்புடன் செயல்பட்டு வருகிறது. இங்கு புதிதாகத் தேர்வாகி வந்துள்ள உங்கள் அத்தனை நிர்வாகிகளுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கே பேசும்போது, நான் நகைச்சுவையாக செழிப்பான அணி, வசதியான அணி என்றெல்லாம் குறிப்பிட்டேன். வெறும் பணத்தில் மட்டும் கிடையாது. செல்வத்தில் மட்டும் கிடையாது. கொள்கையிலும் நீங்கள் செழிப்பான சிறப்பான sஅணியாக, வலிமையான அணியாக நீங்கள் உருவாக வேண்டும். ஏனென்றால் விளையாட்டு மேம்பாட்டு அணி என்பது மிக மிக முக்கியமான அணி.

தமிழ்நாட்டில் இளைஞர்கள், மாணவர்கள் எளிதில் சென்றடைக்கூடிய வாய்ப்பை பெற்ற ஒரு அணி என்றால், அது இந்த விளையாட்டு மேம்பாட்டு அணிதான். அதை நீங்கள் உணர வேண்டும். விளையாட்டு என்பது நம் திராவிட இயக்கக் கொள்கை போல எல்லோருக்குமான ஒன்றாகும். விளையாட்டையும் நம்முடைய கழகத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விளையாட்டின் மீது எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பது அனைவருக்குமே தெரியும்.

நான் பிறந்து வளர்ந்தது கோபாலபுரம். கலைஞர் அவர்களை மேலே சென்று பார்க்க வேண்டுமென்றால் அவர் ஏதாவது கடிதம் எழுதிக் கொண்டிருப்பார் அல்லது முக்கியமான திட்டம் ஒன்றைப் பற்றி கட்சியின் மூத்த முன்னாடிகளிடம் பேசிக் கொண்டிருப்பார். இருந்தாலும், அப்போது ஏதாவது விளையாட்டுப் போட்டி, ஒரு கிரிக்கெட் போட்டி கலைஞருக்குக் கிரிக்கெட் போட்டி ரொம்ப விருப்பம். அதனால் அந்தத் தொலைக்காட்சியில் அந்த கிரிக்கெட் போட்டி ஓடிக்கொண்டே இருக்கும்.

எப்போது என்னைப் பார்த்தாலும் கூப்பிட்டு, `மேட்ச் பாத்தியா' என்று கேட்பார். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய சேப்பாக்கம்திருவல்லிக்கேணி பகுதியில் இருக்கக்கூடிய சேப்பாக்கம் விளையட்டு மைதானத்தில் கலைஞருக்கு என்று இப்போது ஒரு புது அரங்கம் திறந்திருக்கிறோம்.

`கலைஞர் பெவிலியன்' என்றே துவங்கியிருக்கிறோம். புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிற இந்த அரங்கத்திற்கு, கலைஞர் பெயரிலேயே முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

என்ன நிகழ்ச்சியாக இருந்தாலும், கிரிக்கெட் போட்டி அங்கு நடக்கும் போது என்ன நெருக்கடியா இருந்தாலும், அந்தக் கிரிக்கெட் போட்டியில் அவருக்கு அவ்வளவு பெரிய ஆர்வம். கட்சிப் பணி, ஆட்சிப் பணியின் காரணத்தால் போட்டிக ளைக் காண முடியாவிட்டாலும்கூட இருப்பவர்களிடம், ஸ்கோர் என்ன, இப்போது யார் நல்ல பேட்ஸ்மேன், இப்போது யார் நல்ல விக்கெட் கீப்பர், யார் நல்ல பவுலர் அப்படி என்று கேட்டுத் தெரிந்து வைத்துக் கொள்வதில் கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே ரொம்ப ஆர்வம் காட்டுவார்.

கலைஞர் அவர்கள் எப்போதுமே சுறுசுறுப்புடன் இருக்கக் காரணம் என்ன என்று ஒரு பத்திரிக்கை நிரூபர் அவரிடம் கேட்ட போது அவர் சொன்ன பதில். `எனக்கு `சுகர், பிரஷர்' எதுவும் கிடையாது. சிறுவயதில் நான் நிறைய விளையாடுவேன். திருக்குவளையில் நான் ஃபுட்பால், வாலிபால், பேட்மிட்டன், சடுகுடு எல்லாம் நன்றாக விளையாடி இருக்கேன். இன்னும் ஒரு படி மேலே சென்று நான் ஒரு முறை விளையாடும்போது, என்னுடன் படித்த மாணவன் ரங்கராஜனுடைய பல் என்னுடைய கண் இமைகளில் குத்தி காயம் ஏற்பட்டது. அந்தத் தழும்பு இப்போதும் இருக்கிறது என்று அதையும் ஒரு பெருமையாகக் காட்டி தனக்கு இருந்த விளையாட்டு ஆர்வத்தை விளக்கியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இன்னொன்றும் சொல்லியிருக்கிறார், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், `நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்று அரசியலைக்கூட ஹைஜம்ப் விளையாட்டோடு ஒப்பிட்டுப் பேசியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

கலைஞர் அவர்கள் வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களும் விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

நான் சொன்னது போல நம்முடைய சட்டமன்றத்தில் பேசும்போது சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த லெக் ஸ்பின்னர். செட்டில் ஹாக், பேட்மிட்டன், சைக்கிளிங் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர்.

இங்கு வந்திருக்கும் பலரை எனக்கு நேரடியாகவே தெரியும். நீங்கள் மாவட்டச் செயலாளர்கள் மூலமாகவோ, நம்முடைய அணியின் செயலாளர், துணை செயலாளர்கள் எல்லாம் மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம், நேர்காணல் செய்துதான் உங்களையெல்லாம் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்.

நேர்காணல் மூலமாகவோ, மாவட்டச் செயலாளர்களுடைய பரிந்துரை மூலமாகத்தே ர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், முழுவதுமான கிரெடிட், உங்களுடைய தகுதிக்காகக் கொடுக்கப்பட்டிருப்பது இந்தப் பொறுப்புதான்.

கலைஞர் அவர்களும் நம்முடைய தலைவர் அவர்களும் அடிக்கடி சொல்வார்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பதவி அல்ல, பொறுப்பு. அதை நீங்கள் பொறுப்போடு ஏற்றுச் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**பொறுப்பு உணர்ந்து செயல்பட வேண்டும்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னதை நான் இப்போது இங்கு நினைவு கூர விரும்புகிறேன். உங்களுக்குக் கிடைத்திருப்பது மிகப் பெரிய பொறுப்பு. அதை, நீங்கள் பொறுப்புடன் உணர்ந்து செயல்பட வேண்டும். நம்முடைய கழக அரசு, விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளைச் செய்து வருகின்றது.

முன்பெல்லாம் நான் வெளியூர் செல்லும்போது, சுற்றுப்பயணம் செய்தபோது வேலை வேண்டும், மருத்துவச் செலவுக்கு உதவி வேண்டும், கல்வி உதவி வேண்டும் என்றெல்லாம் கேட்பார்கள். ஆனால், இப்போது எனக்கு தினமும் வருகின்ற கோரிக்கை என்னவென்றால், எங்கள் பகுதிக்கு ஸ்டேடியம் வேண்டும். எங்கள் ஊரில் ஜிம் வேண்டும் விளையாட்டு உபகரணங்கள் வேண்டும் என்பதுதான் எனக்கு வருகின்ற அந்தக் கோரிக்கை. அந்த அளவுக்கு விளையாட்டு மீதான ஈடுபாடு தற்போது பொதுமக்களிடையே, இளைஞர்களிடையே அதிகரித்து வந்திருக்கிறது.

`கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்', தொகுதிக்கு ஒரு `மினிஸ்டேடியம்', `மாற்றுத்திறனாளிகளுக்கான `பேரா' ஸ்டேடியம்', `விளையாட்டு நகரம்' எனப் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு, அதற்கான பணிகளை நம்முடைய கழக அரசு தொடங்கியுள்ளது.

செஸ் ஒலிம்பியாட்டில் ஆரம்பித்து, உலகக்கோப்பை ஸ்குவாஸ் போட்டி, 16 ஆண்டுகளுக்குப் பிறகு ஏசியன் கப் ஹாக்கி போட்டி, இந்தியாவிலேயே முதன்முறையாக வோல்டு சர்பிங் லீக், பன்னாட்டுப் போட்டிகளை நம்முடைய கழக அரசு வெற்றிகரமாக நடத்தி வந்து கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியை மிகச்சிறப்பாக நடத்தி முடித்தோம். அடுத்து `கேலோ இந்தியா யூத் கேம்ஸ்' முதன்முறையாகத் தமிழ்நாட்டில் நடத்துகின்ற அந்த வாய்ப்பை ஒன்றிய அரசு நமக்கு அளித்திருக்கின்றது.

வருகின்ற மாதங்களில் ஹெச்.சி.எல் நிறுவனத்துடன் சேர்ந்து ஹெச்.சி.எல் சைக்கிளத்தான் போட்டி நடத்த உள்ளோம். அதேபோல் சென்னையில் முதல்முறையாக, ஃபார்முலா ஃபோர் போன்ற போட்டிகளை எல்லாம் நடத்த உள்ளோம். அதற்கு நீங்களெல்லாம் உறுதுணையாக இருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு உதவும் நோக்கில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி உள்ளோம். அதன் மூலம் பல வீரர், வீராங்கனைகள் பன்னாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், அவர்களுடைய பயணச் செலவு, தங்கும் செலவு, உணவுச் செலவு, உபகரணங்கள் வாங்கவும் நாங்கள் நிதியுதவி வழங்கி இருக்கின்றோம்.

இன்றைக்கு தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடக்கின்ற போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்களை வெல்வோருக்கு நம்முடைய கழக அரசு உயரிய ஊக்கத்தொகையும் வழங்கி வருகின்றது.

**பொழுது போக்கல்ல இயக்கமாக முன்னெடுப்பீர்!**

விளையாட்டுத் துறையில் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்துவரும் சாதனைகளைக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். விளையாட்டை வெறும் பொழுதுபோக்காகப் பார்க்காமல், அதனை ஒரு இயக்கமாக நீங்கள் அத்தனை பேரும் முன்னெடுக்க வேண்டும் என்பது உங்களுடைய கடமை என்பதை, நீங்கள் உணர வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு பொறுப்பை நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் வழங்கி உள்ளார்கள்.

விளையாட்டு மேம்பாட்டு அணியும் என்னென்ன செய்ய வேண்டும் என்று தலைமைக் கழகத்தில் இருந்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கலைஞர் தொடர் ஜோதி ஓட்டம், மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்த வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டு அணிக்கு அந்தப் பொறுப்பை அளித்துள்ளார்கள். அந்தப் பணியை இந்நேரம் நீங்கள் தொடங்கி இருப்பீர்கள், என்று நான் நம்புகின்றேன். இந்தப் பணிகளை நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள இளைஞர்களும் மாணவர்களும் விளையாட்டு மேம்பாட்டு அணியுடன் தொடர்பில் இருப்பது போல பணிகளை மேற்கொள்ள வேண்டும். கிராம அளவில், ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகளை நீங்கள் நடத்தவேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளை வெறும் போட்டியாக மட்டுமின்றி நம்முடைய கழகத்தை, கழகத்தினுடைய கொள்கைகளை மக்களிடத்திலே கொண்டு செல்கின்ற ஒரு வாய்ப்பாக நீங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விளையாட்டு மேம்பாட்டு அணி மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்குக் கழக அரசும் நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத் துறை என்றும் உங்களுக்குத் துணை நிற்கும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கின்றேன்.

இந்த நேரத்தில் இன்னொரு வேண்டுகோள் அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நீங்கள் அத்தனை பேரும் மினிட் புக் வைத்து உங்களின் செயல்பாடுகளைப் பதிவு செய்திட வேண்டும்.

முன்பெல்லாம் நம்முடைய இளைஞர் அணியில் அத்தனை அமைப்பாளர்களுக்கும் துணை அமைப்பாளர்களுக்கும் மினிட் புக் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த மினிட் புக் என்னவென்றால், நீங்கள் என்னென்ன நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கீறீர்கள்.

என்னென்ன நிகழ்ச்சியில் நீங்கள் பங்கு பெற்றுள்ளீர்கள். அது என்ன நிகழ்ச்சி? எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் அப்படி என்று ஒரு குறிப்பு எழுதி தேதியோடு முடிந்தால் ஒரு புகைப்படத்துடன் பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய செய்திகள், அதேபோல் அதில் கலந்துகொண்டுள்ள முக்கியமான நிர்வாகிகள் அவர்களுடைய பெயர் எழுதி, ஒரு கையெழுத்து. அதை நீங்கள் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.

தலைவர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருக்கும்போது மினிட் புக்கை கொண்டு வந்து கொடுப்பார்கள். தலைவர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் செல்லும்போது அந்த மினி புக்கை வாங்கி, ஆய்வு செய்து யார் யார் என்னென்ன பணிகள் செய்திருக்கிறார்களோ அவர்களை வாழ்த்தி, ஒரு கையெழுத்து போட்டுக் கொடுப்பார். அதை இன்னும் பெருமையாக வந்து காட்டுவார்கள்.

இப்போது நானும், என்னுடைய இளைஞர் அணி துணை செயலாளர்களெல்லாம் மாவட்டம், மாவட்டமாகச் சுற்றுப்பயணம் செய்து நேர்காணல் நடத்தும்பொழுது இதைக் கடைப்பிடிக்க அறிவுறுத்துகின்றேன்.

ஆனால், சமீபகாலமாக இந்த சோசியல் மீடியா, செல்போன் வந்த பிறகு இது குறைந்துவிட்டது. அதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இப்போது நாம் இன்டர்வியூவில் வந்து என்னென்ன வேலைகள் செய்திருக்கிறீர்கள் காட்டுங்கள் என்று சொன்னால் மினிட் புக்கெல்லாம் கிடையாது.

ஒரே ஒரு போனை மட்டும் எடுத்துக்காட்டுகிறார்கள். ஃபேஸ்புக் தான் இப்போது மினிட் புக். அந்தப் பழக்கத்தை மீண்டும் நாம் புதுப்பிக்க வேண்டும். இப்போது உங்களையெல்லாம் பல்வேறு இடர்பாடுகளில் தான் உங்களையெல்லாம் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களாக நியமித்துள்ளார்கள்.

பல பேருக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. பல பேர் சொன்னார்கள், இளைஞர் அணியில் வாய்ப்பு கிடைக்க வில்லை என்றால், விளையாட்டு மேம்பாட்டு அணியில் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். பொறுப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று.

இளைஞர் அணி நேர்காணல் வரும்போது நிறைய பேர் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். விளையாட்டுத் துறைக்குப் போய்விட்டுத்தான் வந்திருக்கிறேன். நீங்கள் கொடுத்தால் கொடுங்கள் இல்லையென்றால், நான் அங்கே சென்று வாங்கிக்கிறேன் என்று.

அணியின் செயலாளர் அதேபோல அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஒரே ஒரு மினிட் புக் மட்டும் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். என்ன நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் அதில் நோட் பண்ணி வைத்துக் கொள்ளுங்கள்.

நாளைக்கு உங்கள் மேல் கம்ப்ளைன்ட் பண்ணுவார்கள். அந்தப் பொறுப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கி றது. பத்து பேருக்கு வெறுப்பு இருக்கும். அவங்க வந்து நீங்க சரியா வேலை செய்யவில்லை என்று குறை கூறுவார்கள்.

உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கட்சி வேலையைச் சரியாக நீங்கள் செய்யவில்லை ஒரு அணியினுடைய பணியை நீங்கள் சரியாகச் செய்யவில்லை என்று சொல்வார்கள்.

தெற்கு மாவட்டம் உங்கள் மினிட் புக் எங்கே? செல்போனில் வைத்திருக்கிறீர்கள். எல்லாமே மினிட் புக் ஆரம்பிப்பது சுலபம். ஆனால், அதை மெயின்டெயின் பண்ண வேண்டும் வாழ்த்துக்கள்

உங்கள் அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள். இங்கு கலந்துக்கொண்டிருப்பவர்களெல்லாம் இப்போதிலிருந்து எப்போதாவது இந்த மினிட் புக்கை வைத்து, பத்திரிக்கைச் செய்திகளை வைத்து, கையெழுத்து வாங்குங்கள். எத்தனை பேர் அட்டென்ட் பண்ணியிருக்காங்க உங்க மாவட்டத்துல எத்தனை பேர் வந்திருக்கீங்க. அதை பராமரியுங்கள். இதுதான் உங்களிடம் இருக்கக்கூடிய ஒரே ஆதாரம். இந்த நிகழ்ச்சி நடந்ததுக்கு ஒரே ஆதாரம் இது தான். எனவே அதை மெயின்டெயின் பண்ண வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய தலைவர் நம்மைக் காத்து நின்று கொண்டிருக்கிறார். எதைப்பற்றியும் நாம் கவலைப்பட வேண்டாம். இன்றைக்குத் தமிழ்நாட்டை வெல்லலாம் என்று சிலர் நினைக்கின்றார்கள். அதற்கான முயற்சியையும் சிலர் மேற்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி இந்திய ஒன்றியத்தில் எந்த மாநிலத்தில் வேண்டுமானாலும் வென்றாலும் தமிழ்நாட்டில் மட்டும் ஒருபோதும் வெல்லாது.

அதற்கான காரணம், நான் சட்டமன்றத்தில் பேசியதுதான். இங்கு பேச விரும்புகின்றேன். அதற்கான காரணம் தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அந்த வலுவான அணியும், அந்த அணியை வழிநடத்தும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் அந்தக் கேப்டன்தான்.

அதோடு மட்டுமல்ல, நம்முடைய அணிக்கு கிடைத்திருக்கக்கூடிய பயிற்சியாளர்கள், (கோச்சர்ஸ்) இந்தியாவின் எந்த இயக்கத்திற்கும் இப்படி ஒரு பயிற்சியாளர்கள் கிடையாது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர் போல இந்தியாவில் வேறு எந்த அணிக்கும் இது போன்ற பயிற்சியாளர்கள் கிடைத்தது கிடையாது. எந்த அணி நமக்கு எதிரான அணி என்றும், எந்த நேரத்தில் யாரோடு மோத வேண்டும் என்றும் நமக்கு தந்தை பெரியார் அவர்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

எப்படி ஒற்றுமையோடும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடோடும் ஓர் அணி விளையாட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

எந்தப் பந்தை அடிக்க வேண்டும். எந்தப் பந்தை அடிக்கக் கூடாது என்று நமக்கு நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

எப்பொழுது பொறுமையாக டிபன்ஸ் ஆட வேண்டும், எப்பொழுது முன்னேறி சென்று சிக்சர் அடிக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள்.

இதையெல்லாம் நீங்கள் மனதில் கொண்டு மிகச் சிறந்த ஒரு டீம் எஃபோர்ட்டுடன் இருந்தால்தான் வெல்லமுடியும். நம் அணிகளுக்குள் ஒரு போட்டி இருக்க வேண்டும். தி.மு.கவில் நிறைய அணிகள் இருக்கின்றன.

இளைஞர் அணிக்கும், விளையாட்டு மேம்பாட்டு அணிக்கும் போட்டி இருக்க வேண்டும். எந்த அணி கழகத்திற்காக அதிகமாக உழைக்கிறது. எந்த அணி கழகம் சொல்கின்ற பணியை முதலில் செய்து காட்டுகிறது, களத்தில் இறங்கி போராட்டமானாலும், ஆர்பாட்டமானாலும் எதுவாக இருந்தாலும் அதை முதலில் செய்ய வேண்டும் என்று நம் அணிகளுக்குள் ஒரு போட்டி இருக்க வேண்டும்.

எனவே அந்தப் போட்டியில் இளைஞர் அணியும் உங்களுக்குப் போட்டியாக நிற்கும் என்று கூறிக்கொண்டு வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, விளையாட்டு மேம்பாட்டுதுறை அணி செய்கின்ற ஒவ்வொரு பணியும் சிறக்க வேண்டும்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்களும் கூட நிற்கும் அவருடைய மாநில துணைச் செயலாளர்கள் அத்தனைப்பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.



ARASU ARTS
நாள் : 11 செப்டம்பர் 2023
திங்கட்கிழமை இடம் : பரமக்குடி
ஒடுக்கப்பட்ட மக்களின்
உரிமைக்காக போராடிய
சமூக நீதிப் போராளி – தியாகி
இமானுவேல் சேகரனார்
66 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்
நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
அன்புடன்
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் Bsc., BL.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்.
கழக தேர்தல் பணிக்குழு தலைவர்.
காதர்பாட்சா முத்துராமலிங்கம் M.L.A.,
இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்
செ.முருகேசன் M.L.A.,
பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்.


இரு மனங்கள் இணையட்டும்!
இல்லறம் இன்ப ஒளியாய் வீசட்டும்!!
திருக்கோயில்கள்
இணைந்து நடத்தும்
திருமண விழா
நாள் : 11.09.2023 திங்கட்கிழமை காலை 9 மணி
இடம் : அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்
திருமண மண்டபம் திருவான்மியூர், சென்னை.
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்கள் வழிகாட்டுதலின்படி
மங்கல நாண் வழங்கி
திருமணங்களை நடத்தி வைத்து
வாழ்த்துரை வழங்குபவர்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
துரைமுருகன்
அவர்களையும்
மாண்புமிகு மருத்துவம் மற்றும்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
மா.சுப்பிரமணியன்
அவர்களையும்
நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழச்சி தங்கபாண்டியன்
அவர்களையும்
சட்டமன்ற உறுப்பினர்
ஜே.எம்.எச்.அசன் மவுலானா
அவர்களையும் வருக. வருக..
என மகிழ்வுடன் வரவேற்கும்
பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
ARASU ARTS

# ஒரே நாடு, ஒரே சர்வாதிகாரம்!




ஒரே தேசம் ஒரே தேர்தல்' என்பதை அமல்படுத்த முனைவதன் நோக்கம், அதிகாரங்களை ஒன்றிய அரசாங்கத்துடன் குவித்து, சாராம்சத்தில் மாநிலங்களின் அதிகாரங்களை, கூட்டாட்சித் தத்துவத்தை, ஒழித்துக் கட்டுவதேயாகும்.

மோடி அரசாங்கம், நாடாளுமன்ற ஜன நாயகம் மற்றும் கூட்டாட்சித் தத்துவம் ஆகிய இரண்டின் மீதும் 'ஒரே தேசம், ஒரே தேர்தல்' ('One Nation, One Election' (ONOE)) என்ற முழக்கத்தை அமல்படுத்து வதன் மூலம் தாக்குதலைத் தொடுத்திருக்கிறது. இதற்காக அரசாங்கம், குடியரசு முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் எட்டு உறுப்பினர் கள் கொண்ட குழு ஒன்றையும் அமைத்திருக்கிறது. மக்களவைக்கும், மாநில சட்டமன்ற பேரவைக ளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்களை நடத்துவது எப்படி, அதற்குத் தேவையான சட்ட ரீதியான மற்றும் அரசமைப்புச்சட்டத் தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பவை குறித்து பரிந்துரைப்பதே இந்தக் குழுவின் ஆய்வெல்லை (terms of reference) யில் தெளிவாக வரையறுக்கப் பட்டிருக்கிறது. இந்தக் குழுவில் உள்துறை அமைச்சர் அமித் ஷா இணைக்கப்பட்டிருப்பதிலிருந்தும் இந்தக் குழுவில் பொறுக்கி எடுக்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ள இதர நபர்களைப் பார்ப்பதிலிருந்தும் இந்தக்குழு அரசாங்கம் எதை விரும்புகிறதோ அதைச் செய்யும் என்று எதிர்பார்த்திட முடியும்.

### 2014 முதலே...

2014இல் பாஜக ஆட்சிப்பொறுப்பிற்கு வந்ததிலி ருந்தே, நரேந்திர மோடி குறிப்பிட்ட கால இடைவெளி களில் தொடர்ந்து 'ஒரே தேசம், ஒரே தேர்தல்' என்ப தன் தேவையை அறிவித்துக் கொண்டிருந்தார். 2020இல் "இது ஒன்றும் விவாதத்திற்குரிய ஒன்று அல்ல" என்றும், "இது இந்தியாவிற்கான தேவை" என்றும் அவர் பிரகடனம் செய்திருந்தார்.

### ஏற்கெனவே மூன்று குழுக்கள்...

மோடி ஆட்சிக்கு வந்தபின்னர், ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்துவது தொடர்பாக ஆராய்ந்திட மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 2015 இல், பணியாளர், பொதுக் குறைகள், சட்டம்நீதி ஆகியவற்றின் நாடாளுமன்ற நிலைக்குழு (Parliamentary Standing Committee on Personnel, Public Grievances, Law and Justice) இது தொடர்பாக ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. 2017இல் நிதி ஆயோக், 'ஒரே சமயத்தில் தேர்தல் குறித்து ஆய்வு' (`Analysis of Simultaneous Election') என்பதன் மீது ஒருசில முன்மொழிவுகளை அளித்திருந்தது. 2018 ஆகஸ்டில் சட்ட ஆணையம் ஒரே சமயத்தில் தேர்தல்கள் குறித்து வரைவு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவை அனைத்தும் சில மாநில சட்டமன்றங்களின் ஆட்சிக் காலத்தைக் குறைத்து, அல்லது, சிலவற்றின் ஆட்சிக்காலத்தை நீட்டித்து, முன்மொழிந்திருந்தன. ஏனெனில் அப்போதுதான் மக்களவைக்கான தேர்தல்களை அவற்றுடன் இணைத்து நடத்திட முடியும். சிலர் இந்தத் தேர்தல்களை ஐந்தாண்டுக் காலத்தில் இரு பகுதிக ளாக நடத்திடப் பரிந்துரைத்தனர். அதாவது, ஒரு பகுதி, மக்களவைத் தேர்தல்களுடன் நாட்டிலுள்ள மாநில சட்டமன்றங்களில் பாதி அளவிற்குத் தேர்தல் களை நடத்துவது. அடுத்த பகுதியில் இதர சட்டமன்றங் கள் அனைத்திற்கும் தேர்தல்கள் நடத்துவது.

### ஜனநாயக அடிப்படைக்கு எதிரானது

மக்களவைத் தேர்தல்களுடன் மாநில சட்டமன்றங் களுக்கும் தேர்தல்களை நடத்துவதற்கான முன்மொழி வுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத் தும் ஜனநாயக விரோதமானவை மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் ஆணிவேரையே வெட்டி வீழ்த்திடும் நடவ டிக்கைகளாகும், தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் குறிப் பிட்ட கால அளவிற்கு மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பையும் அடித்துவீழ்த்திடும். நாடாளுமன்றம்/சட்டமன்றங்கள், அல்லது அர சாங்கத்தின், ஆயுட்காலத்தை வெட்டிக் குறைப்பதோ அல்லது நீட்டிப்பதோ, கட்சி அடிப்படையிலான நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படைக்கு எதிரா னதாகும் மற்றும் ஆட்சியாளர்கள் நாடாளுமன்ற/சட்ட மன்றங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பை மீறுவதாகும். மேலும், ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்துவ தென்பது, அரசாங்கம் நாடாளுமன்றம்/சட்டமன்றங்களுக்குப் பதில்சொல்ல வேண்டும் என்கிற அரசமைப்புச் சட்டத்தின் விதிகளைக் குளறுபடி செய்வது அல்லது மீறுவதாகும். அரசமைப்புச்சட்டத்தின்கீழ், ஓர் அரசாங்கமானது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, கவிழ்ந்தாலோ, அல்லது, நிதிச் சட்ட முன்வடிவின் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதில் தோல்வியுற்றாலோ, அது ராஜினாமா செய்ய வேண்டிய தாகும். (it is bound to resign). அதனைத்தொடர்ந்து ஒரு மாற்று அரசாங்கம் அமைக்கப்பட முடியவில்லை என்றால், அவை கலைக்கப்பட்டு, இடைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அரசமைப்புச்சட்டத்தின்கீழ் மக்களவைக்கோ, அல்லது, சட்டமன்றங்களுக்கோ பதவிக் காலம் நிர்ணயம் (fixity of tenure) செய்யப்படவில்லை.

### மக்களின் தேர்வை பொருத்தமற்றதாக்கும் `திரத்தன்மை

'பதவிக் காலம் நிர்ணயம்' என்பதன் பொருள், ஓர் ஆளும் கட்சி, அவையில் உறுதியான பெரும்பான்மை யுடன் இருக்கும் சமயத்தில், முன்தேதியிட்டுத் தேர்தல் கள் நடத்துவதற்காக, அவையைக் கலைத்திட பரிந் துரைக்க முடியாது. மேலும், மக்களவையில் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் முன்மொழி யப்பட்டால், அத்துடன் மாற்று அரசாங்கம் அமைத்திட புதிய தலைவரையும் குறிப்பிட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அத்துடன் இணைத்திட வேண்டும் என்று சட்ட ஆணையம் முன்மொழிந் திருக்கிறது. "நம்பிக்கையின்மையின் ஆக்கப் பூர்வமான வாக்கு" ("constructive vote of no confidence") என்று இது கூறப்படுகிறது. இதன் பொருள் என்னவெனில், ஓர் அரசாங்கம் பெரும் பான்மையிழந்து தோல்வியடையுமானால், அதற்கு மாற்றாக ஏதேனும் ஓர் அரசாங்கம் இருந்திட வேண் டும், அது மக்களின் தெரிவினைப் பிரதிநிதித்துவப் படுத்தாததாகக் கூட இருந்திடலாம். பதவிக்காலத் தை நிர்ணயம் செய்வதன் மூலம் ஸ்திரத்தன்மைக்கு முதன்மை கொடுக்கப்படுகிறது. இங்கே மக்களின் தேர்வு பொருத்தமற்றதாகி விடுகிறது. இது ஆளும் கட்சிக்கு சாதகமாகவே அமைந்திடும்.

### கூட்டாட்சியை ஒழித்துக் கட்டுவது

'ஒரே தேசம் ஒரே தேர்தல்' என்பதை அமல்படுத்த முனைவதன் நோக்கம், அதிகாரங்களை ஒன்றிய அர சாங்கத்துடன் குவித்து, சாராம்சத்தில் மாநிலங்களின் அதிகாரங்களை, கூட்டாட்சித் தத்துவத்தை, ஒழித்துக் கட்டுவதேயாகும். குடியரசுத் தலைவருக்கு, அதாவது ஒன்றிய அரசாங்கத்துக்கு, மாநில சட்டமன்றங்களின் ஆட்சிக் காலத்தை வெட்டிக் குறைத்திடவோ அல்லது நீட்டித்திடவோ அதிகாரம் அளிப்பதென்பது, முழுமையாக மாநிலங்களின் உரிமைகளையும், அதன் தேர்ந் தெடுக்கப்பட்ட சட்டமன்றங்களின் உரிமைகளையும் அரித்து வீழ்த்துவதேயாகும். ஒரே சமயத்தில் தேர்தல் கள் என்பதை அடைந்த பின்னர், மாநில அரசாங்கங் கள் அங்கேயுள்ள சட்டமன்றங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்பதும், மக்கள் தங்களுக்கான மாநில அரசாங்கங்களைப் பெறுவது என்பதற்கான விருப்பத் தேர்வும் வரையறைப்படுத்தப்படும்.

மாநில அரசாங்கங்களின் உரிமைகளையும், மாநில சட்டமன்றங்களின் உரிமைகளையும் மீறி, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் எப்படியெல்லாம் நடந்து கொண்டு வருகி றார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கி றோம். ஒரே சமயத்தில் தேர்தல்கள் என்ற பெயரில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, கட்டுப்பாடுகள் ஒன்றிய அரசிடம் குவிவதன் மூலம், ஆளுநர்கள் என்ப வர்கள் ஒன்றிய அரசின் வைஸ்ராய்களாக நடந்து கொள்வார்கள் என்றாகிவிடும்.

### ஆர்எஸ்எஸ், பாஜகவின் ஜனநாயக விரோத முயற்சி

இந்தியா 28 மாநிலங்களைப் பெற்றிருக்கின்றது. ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு அரசியல் மற்றும் சமூக நிலைமைகளுடன் இருப்பவைகளாகும். ஜம்முகாஷ்மீர் மாநிலம் மாநில அந்தஸ்தை இழந்துள்ளது. ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் ஒரு சீரான நிலையைக் கொண்டுவருவதற்கான முயற்சி ஆர்எஸ் எஸ்/பாஜக வகையறாக்களின் சிந்தனையோட்டமாகும். ஒரே தேசம், ஒரே தேர்தல் என்கிற இவர்களின் கருத்தாக் கமும், இவர்களின் 'ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே கலாச்சா ரம்' என்கிற முழக்கத்தைப் போன்றதேயாகும்.

### நிறைய திருத்தங்கள் செய்திட வேண்டும்

நாடாளுமன்றம், மாநில சட்டமன்றங்களுக்கு ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்த வேண்டும் எனில், அதற்கு அரசமைப்புச்சட்டத்தை பெரிய அளவுக்கு மறுசீரமைப்புச் செய்தாக வேண்டும். நாடாளுமன் றத்தின் ஆயுட் காலம் அல்லது ஆட்சிக் காலம் குறித்த அரசமைப்புச்சட்டத்தின் 83ஆவது பிரிவில் திருத்தங் கள் கொண்டுவரப்பட வேண்டும். அதேபோன்றே மக்க ளவையைக் கலைப்பது தொடர்பான 85ஆவது பிரிவி லும், மாநில சட்டமன்றங்கள் தொடர்பான 172ஆவது பிரிவிலும், மாநில சட்டமன்றங்களைக் கலைப்பது தொடர்பான 174ஆவது பிரிவிலும், அரசமைப்புச் சட்ட எந்திரம் தோல்வி அடைந்தது என்கிற 356ஆவது பிரிவிலும் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இவை மட்டுமல்லாமல் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் இதர விதிகளிலும் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

### அவசர கதியில் அமல்படுத்த துடிப்பு

ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழு பரிந்துரை எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும், அவற் றை அமல்படுத்துவதற்காக அரசமைப்புச் சட்டத்தி லும், இதர சட்டங்களிலும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு கால அவகாசம் தேவை. அவற்றை வரவிருக்கும் மக்கள வைத் தேர்தலுக்காக, அவசரகதியில் அமல்படுத்திட முடியாது. ஆனாலும், அரசாங்கம் இதுதொடர்பாக நட வடிக்கைகளை ஆரம்பித்துவிட்டது. வரும் செப்டம்பர் 18 முதல் 22 தேதிகளில் நடைபெறவிருக்கும் நாடாளு மன்றத்தின் சிறப்பு அமர்வின்போது, இது தொடர் பாக சில அறிவிப்புகள் வரலாம். மோடி அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் விதத்தில் எதிர்க்கட்சிகள் விழிப் புடனிருந்து, தயாரிப்புப் பணிகளில் ஈடுபட வேண்டும். ஒரே தேசம் ஒரே தேர்தல் என்னும் முழக்கம் ஜனநாயகத் திற்கும், கூட்டாட்சித் தத்துவத்திற்கும் எப்படியெல்லாம் ஆபத்தைக் கொண்டுவரும் என்று மக்கள் மத்தியில் பெரிய அளவில் பிரச்சாரத்தை உடனடியாகச் செய்திட வேண்டும்.

**செப்டம்பர் 5, 2023, தமிழில் : ச.வீரமணி.**

**நன்றி : தீக்கதிர்**
**9.9.2023**



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி, 44வது வார்டு, பெரியகடை வீதி, பழனியம்மாள் பள்ளி எதிரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் கீழ் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக 2 நியாய விலைக்கடை கட்டிடம் கட்டும் பணியினை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். உடன் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், பகுதி செயலாளர் மு.க.உசேன், வட்டக்கழக செயலாளர்கள் முகமது ரபீக், முகமது அலி, பொதுக்குழு உறுப்பினர் எல்.எம்.மஸ்ஊது, செ.திலகராஜ், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் இ.சிராஜ்தீன் உள்பட பலர் உள்ளனர்.



தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தகடூர் புத்தக பேரவை,பாரதி புத்தகாலயம் இணைந்து நடத்தும் புத்தக திருவிழா 2023 நிகழ்ச்சியை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் திறந்து வைத்து, மாணவ, மாணவியரின் படிக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கில் தனது சொந்த நிதியில் இருந்து ரூ.1.லட்ச ரூபாயினை தகடூர் புத்தகப்பேரவைக்கு நன்கொடையாக அளித்து சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் புத்தகப்பேரவை தலைவர் டாக்டர். இரா.செந்தில், மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## 6 மாநிலங்களில் சட்டப் பேரவை இடைத்தேர்தல்:

# ‘இந்தியா’ கூட்டணி அபார வெற்றி!

### கேரளாவில் பா.ஜ.க. டெபாசிட் இழப்பு! உ.பி.யில் படுதோல்வி!

*புதுடெல்லி, செப். 11 -*

*நாடு முழுவதும் காலியாக இருந்த 7 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி 4 தொகுதிகளை கைப்பற்றியது. குறிப்பாக உபியில் பா.ஜ படுதோல்வி அடைந்துள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் பாகேஷ்வர், உத்தரபிரதேசத்தில் கோசி, கேரளாவின் புதுப்பள்ளி, மேற்கு வங்கத்தில் துப்குரி, ஜார்கண்டில் தும்ரி, திரிபுராவின் போக்ஸாநகர் மற்றும் தன்பூர் ஆகிய சட்டசபை தொகுதிகள் காலியாக இருந்ததால் இந்த 6 மாநிலங்களில் உள்ள 7 தொகுதிகளுக்கும் கடந்த 5ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இதற்கான ஓட்டு எண்ணிக்கை நேற்று நடந்தது.*

*உத்தரபிரதேச மாநிலம் கோசி தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட சமாஜ்வாடி வேட்பாளர் சுதாகர்சிங் 42,759 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் 1,24,427 ஓட்டுகளும், பா.ஜ வேட்பாளர் தாராசிங் சவுகான் 81,668 ஓட்டுகளும் பெற்றிருந்தனர். கடந்த ஆண்டு நடந்த தேர்தலில் சமாஜ்வாடி கட்சி சார்பில் வெற்றி பெற்றவர் தாராசிங் சவுகான். இவர் கடந்த ஜூலை மாதம் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு பா.ஜ.வில் சேர்ந்தார். ஆனால், இந்த முறை பா.ஜ.வில் வேட்பாளராக போட்டியிட்ட அவர் தோல்வியை சந்தித்தார். முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் பா.ஜ. ஆட்சி நடைபெறும் உ.பியில் பா.ஜ. படுதோல்வியை சந்தித்துள்ளது அக்கட்சியினரை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.*

*கேரள முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டி மறைவால் காலியான புதுப்பள்ளி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரும், உம்மன் சாண்டி மகனுமான சாண்டி உம்மன் வெற்றி பெற்றார். அவர் 37,719 ஓட்டு வித்தியாசத்தில் மார்க்சிஸ்ட் வேட்பாளர் ஜெய்க் சி தாமசை தோற்கடித்தார். சாண்டி உம்மன் 80,144 ஓட்டுகளும், ஜெய்க் சி தாமஸ் 42,425 ஓட்டுகளும் பெற்றனர்.*

*மேற்குவங்க மாநிலம் துப்குரி தொகுதியில் 2021ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் வென்ற பா.ஜ எம்.எல்.ஏ. பிஷ்ணு பதா ராய் ஜூலை 25ம் தேதி இறந்ததால் பா.ஜ வேட்பாளராக 2021ல் ஜம்முவில் தீவிரவாத தாக்குதலில் பலியான சி.ஆர்.பி.எப். வீரர் மனைவி தாப்சி ராய் நிறுத்தப்பட்டார். ஆனால் இந்த தேர்தலில் மம்தா தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளரும், கல்லூரி பேராசிரியருமான நிர்மல் சந்திரராய் 4313 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் 96,961 ஓட்டு பெற்றார். பா.ஜ வேட்பாளர் தாப்சி ராய் 92,648 ஓட்டுகளும், காங்கிரஸ் ஆதரவு பெற்ற மார்க்சிஸ்ட் வேட்பாளர் 13,666 ஓட்டுகளும் பெற்றனர். இதனால் பா.ஜ விடம் இருந்து துப்குரி தொகுதியை திரிணாமுல் தட்டிப்பறித்தது.*

*ஜார்க்கண்ட் மாநிலம் தும்ரி தொகுதியில் அமைச்சர் ஜாகர்நாத் மக்தோ மறைவால் நடந்த இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா வேட்பாளரும், அமைச்சர் மக்தோவின் மனைவியுமான பெபி தேவி 17 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் பா.ஜ. வேட்பாளர் யசோதா தேவியை வீழ்த்தினார். பெபி தேவி 1,35,480 ஓட்டுகளும், யசோதா தேவி 1,18,380 ஓட்டுகளும் பெற்றனர்.*

**டெபாசிட் பறிகொடுத்த பா.ஜ.**

*கேரளாவின் புதுப்பள்ளி தொகுதியில் கடந்த 2021ம் ஆண்டு நடந்த தேர்தலில் பா.ஜ. சார்பில் போட்டியிட்ட ஹரிக்கு 11,694 வாக்குகள் கிடைத்தன. ஆனால் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட லிஜின் லாலுக்கு 6,558 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இவருக்கு இந்த தேர்தலில் 5.02 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் அவரது டெபாசிட் பறிபோனது.*

# திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிவிப்பு!



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட செயற்குழுக் கூட்டம் வருகின்ற 12.09.2023 (செவ்வாய்) மாலை 5.30 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான, "கலைஞர் அறிவாலயம்", "தளபதி அரங்கில்" மாவட்டக் கழக அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், எனது (இல.பத்மநாபன்) முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொள்ள உள்ளார்கள்.

அதுசமயம், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**குறிப்பு** : மாவட்டக் கழகத்தின் சார்பு அணிகளின் தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

**பொருள்** : செப்டம்பர் 17 தி.மு.கழக முப்பெரும் விழா குறித்து. வருகின்ற 24092023 அன்று நடைபெறும் தி.மு.கழக மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பாசறை கூட்டம் குறித்து. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**இல.பத்மநாபன்,**
செயலாளர்
திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

# "உதயநிதி பேச்சு.... உண்மையின் வீச்சு"

ஒன்றே குலமென்றும் ஒருவனே தேவனென்றும்
அன்றே முழங்கினார் அறிவார்ந்த திருமூலர்......
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமெனும் தத்துவத்தை
பெரும் புலவர் வள்ளுவரும் குறள் வழியே கொடுத்தார்....!

யாதும் நம்மூரென்றும் யாவரும் நம் உறவின ரென்றும்
கணியன் பூங்குன்றனும் கவியொன்றை யாத்தார்.
இதையெலாம் உள்வாங்கியே பெரியாரும், அண்ணாவும்
ஏற்றமிகு கலைஞரும் மேடையெலாம் முழங்கினர்...!

அந்தவழி பின்பற்றியே உதயநிதியும் பேசினார்
அதிலெந்த தவரேதும் அணுவளவும் இல்லை....
எந்தஒரு மதத்தையும் இழிவுபடுத்திப் பேசவில்லை
எந்த ஒரு இனத்தையும் புண்படுத்திப் பேசவில்லை.

இனப்படுகொலை பற்றி உதயநிதி பேசாதபோது
ஏனிந்த சாமியார் அரிவாளை எடுக்கிறார்?
மனம்போனபோக்கில் ஒன்றிய அமைச்சர்களும்
மாசு கற்பிக்க வார்த்தைகளை வீசுகிறார்...!

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையைப் பறித்து பெண்களை
ஒடுக்குவதும் அடக்குவதும் அநியாய மென்று
எடுத்துரைத்த கருத்தில் எப்பிழையும் இல்லை... பின்
ஏன் கொடுக்க வேண்டும் உதயநிதிக்குத் தொல்லை.....

கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப் போகட்டுமென
கற்றறிந்த சான்றோர் உரைத்ததெலாம் பொய்யா.....?
பெண்ணுரிமை பெண் விடுதலை வேண்டுமென உரைத்திட்ட
பாரதி, பாவேந்தர் கவிதைகளும் பொய்யா.....?

வர்ணாசிரமக் கொள்கையெலாம் மலையேறிப் போச்சு
வானத்திலே 'சந்திரயான்' வலம்வரும் காலமாச்சு.....
விர்ரென்று பறக்கின்ற விஞ்ஞான உலகத்தின்
வேகத்தே பயணிப்பதே நமக்கும் நல்லது.....

கொடுமைமிகு மதவாத நெருப்பினை மூட்டி - அதிலே
குளிர்காய நினைக்கின்ற குற்றத்தை செய்யாதீர் - மக்கள்
கடமையிலே உங்கள் கவனத்தைச் செலுத்தி
கயமை செய்யாது காலத்தை ஓட்டுவீர்.....!

கருத்தினை கருத்தால் எதிர்கொண்டு விவாதிப்பதே
கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியமிகு அணுகுமுறை.....- உதயநிதி
உரையினை வெட்டிஓட்டி திசை திருப்ப நினைப்பது
உலகம் ஒருபோதும் ஏற்காத நடைமுறை......

உலகத்தோடு ஒட்டி ஒழுகலே நலமென்று
உரைத்திட்ட வள்ளுவனின் வழியிலே நடப்போம்!
நிலவுகிற வேறுபாடு நிறைந்த சனாதனத்தை
நீக்கியே சமதர்ம உலகம் காண்போம்!



**கவிஞர்**
**இரவி பாரதி**

## ரூ.7.5 இலட்சம் கோடி ஊழல்: சி. ஏ. ஜி. அறிக்கையை திசைதிருப்புவதற்கு

# மோடியின் பா.ஜ. க.அரசுக்கு ஒரு 'கவசமாக' பயன்பட்டிருக்கிறது - சனாதனம்!

### "புதிய தலைமுறை" யில் – "நேர்படப் பேசு" நிகழ்ச்சி விவாதத்தில் ஊடகவியலாளர் பா.ம. மகிழ்நன் ஆதாரத்துடன் பதில்!

சென்னை,செப்.10-

**"ரூ.7.5 இலட்சம் கோடி சி. ஏ. ஜி.அறிக்கையை திசைதிருப்புவதற்கும் மோடியின் பா.ஜ. க.அரசுக்கு ஒரு 'கவசமாக' இந்த 'சனாதனம்' பேச்சு பயன்பட்டிருக்கிறது என்று "புதிய தலைமுறை" யில் "நேர்படப் பேசு" நிகழ்ச்சி விவாதத்தில் ஊடகவியாளர் பா.ம. மகிழ்நன் ஆதாரத்துடன் பதிலளித்துள்ளார்.**

**"புதிய தலைமுறை"யில் உதயநிதி ஸ்டாலின் சனாதன பேச்சு, பிரதமர் மோடி vs முதல்வர் மு.க.ஸ்டாலின் - சர்ச்சையின் சாதகம் யாருக்கு? என்ற தலைப்பில் தமிழினியனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற "நேர்படப் பேசு" நிகழ்ச்சி விவாதத்தில் ஊடகவியாளர் பா.ம. மகிழ்நன் தனது கருத்து ஆதாரத்துடன் பதிவிட்டுள்ளார்.**

இது குறித்த விவாதம் வருமாறு:-

**நெறியாளர் தமிழினியன்:** இன்று நாம் விவாதிக்க இருப்பது, சில தினங்களுக்கு முன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதனம் பற்றி பேசியது பல விவாதங்களை கிளப்பி இருக்கிறது. அந்த விவாதங்கள் இன்று வரை தொடர்வதற்கான காரணம் என்ன? நேற்றைய தினம் ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் நநேந்திர மோடி அவர்கள் பேசியுள்ளார். ஜி 20 மாநாடு நமது நாட்டில் நடக்கிறது. அந்த மாநாடு குறித்த அமைச்சரவைக் கூட்டம், மிக முக்கியமான அமைச்சரவைக் கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பேசிய சனாதனம் குறித்து பிரதமர் பேசி அதற்கு தக்க பதிலடி, ஆதாரத்துடன் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். அதற்கு பதிலளிக்கும் விதமாக தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'அமைச்சர் உதயநிதி பேசியது குறித்த முழு விவரம் அறியாமல் பிரதமர் பேசுகிறார்' என்று தெரிவித்து இருக்கிறார்.

இப்படியாக இந்த சனாதனம் குறித்த விவாதங்கள் தொடர்வதற்கான காரணங்கள் என்ன? இதில் பலன் அடையப் போவது யார்? என்பது குறித்துதான் இங்கே பேசவிருக்கின்றோம். நம்மோடு தி.மு.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் சரவணன், அரசியல் விமர்சகர் சுமந்த் சி. ராமன், அரசியல் விமர்சகர் டி.டி.எஸ்.ரவி, உடகவியாளர் பா.ம.மகிழ்நன் ஆகியோர் இணைந்திருக்கின்றனர்.

**நெறியாளர் தமிழினியன்:-** ஊடகவியாளர் மகிழ்நன் இது குறித்து நீங்கள் பேசலாம்.

**ஊடகவியாளர் பா.ம.மகிழ்நன்:-** பிரதமர் மோடி அவர்கள் சொன்னதாக,கேள்விப்பட்டதாகத் தான் எல்லா பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. அடிப்படையில் அவர் சொன்னார், இல்லை இல்லை அடிப்படையில் அவர்களுக்கு ஆபத்து, இவர்களுக்கு பாதகம் என்று. முதலில் மோடி கூட்டம் பயந்து இருக்கிறார்கள். இந்தச் செய்தியை ஒப்பனாக சொல்வதற்கு துணிச்சல் இல்லாத காரணத்தினால், சொல்லப்படுகிறது என்று unofficial என்று போடுகிறார்கள். மீடியாவில் இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். இந்தச் செய்தி unofficial –அப்படி நடந்ததாகப் போடுங்கள்.

அதில் மோடி என்ன சொன்னதாக இருக்கிறது? அதாவது, 'நீங்கள் போய் ஆதாரப்பூர்வமாக அம்பலப்படுத்துங்கள்.' சரி, ஆதாரப்பூர்வமாக அம்பலப்படுத்துங்கள் என்று சொல்பவர், அவரே அம்பலப்படுத்த வேண்டியதுதானே. இது ஆழம் பார்ப்பதாகும். ஒரு வேளை ஆபத்து வந்துவிட்டால், இதில் இருந்து நாம் எஸ்கேப் ஆகிவிடலாம், ஏனென்றால் இது unofficial statement - நாங்கள் அப்படி பேசவில்லை என்று தப்பித்துவிடலாம்.!

ஒரே செய்தியை, ஒரே நேரத்தில் ஒரே நாளில் இந்து , தந்தி வெளியிடுகிறது என்பதெல்லாம் எதேச்சையாக நடக்காது. மோடி அவர்கள் துணிச்சலாக, 'நான் ஆதாரத்தோடு பேசுகிறேன், வாங்கடா யாரெல்லாம் இருக்கிறீர்கள்' என்று பேசவில்லை.



ஊடகவியலாளர்
மகிழ்நன் பா.ம



நெறியாளர்
சா.தமிழினியன்

இந்த விஷயம் 'பேக்பையர்' ஆகும். அப்படி என்கிறதையொட்டி , அவர்கள் என்ன நினைத்தார்கள். இதில் அவர்கள் 'Back' அடித்துவிடுவார்கள் என்று நினைத்தார்கள். ஆனால், அவர்கள் தொடர்ச்சியாக அதனை எதிர்த்து நிற்பதால் அவர்களால் இதனை எதிர்கொள்ள முடியாத காரணத்தினால் தன்னுடைய அமைச்சரவையில் வெளியிடுகிறார்- ஒன்று!

இன்னொன்று - சுமந்த் சார் அவர்கள் இங்கே பேசும்போது, சனாதனத்தில் சாதி ஒரு அம்சம்தானே, நாம் அதை மட்டும் நீக்குவோம் என்று சொல்கிறார். நான் சில கேள்விகள் கேட்கிறேன். இப்போது அவர் இராமாயணம் படித்து இருப்பார். நானும் ஓரளவு படித்து இருக்கிறேன். அவர்கள் சொல்வதின் அடிப்படையில் - புரிந்து கொள்வதற்காக நானும் அதே இந்து என்று அடையாளப்படுத்தப்படுகின்ற அந்த மக்கள் திரளில் இருந்துதான் வருகிறேன்.

இராமாயணத்தில் இது துஷ்யந்த் செய்தது என்று வழக்கமாக எல்லா சேனல்களிலும் பேசப்பட்டு இருக்கிறார். அவர் பேசும்போது என்ன சொல்கிறார் என்றால், இராமாயணத்தில் ஒரு பார்ப்பன சிறுவன் இறந்து கிடப்பதை பார்த்துக் கொண்டு, தன்னுடைய ராஜ்யத்தில் சூத்திரன் ஒருத்தன்-அவன் சம்பூகன், தவம் இருக்கிறான், தவம் இருப்பதின் காரணத்தினால் அதனால் பாதகம் ஏற்பட்டு விட்டது என்று பலரும் முறையிட சம்பூகன் கொலை செய்யப்படுகிறான்.

அந்த திரேதாயுகத்தில் சூத்திரன் தவம் செய்வது தவறு. தன்னுடைய ராஜ தர்மத்தை அவர் கடைபிடித்தார் இராமர். இப்போது இராயமணத்தில் இருந்தும் இராமர் என்கின்ற கதாபாத்திரதை அவதாரப் புருஷன் என்று நம்மிடம் அறிமுகப்படுத்துகின்ற அவர்கள் இராமரை விலக்கத் தயாரா?

அதோடு மட்டுமல்லாமல் மகாபாரதத்தில் - 'india cul ture government.in'- அதில் இருக்கிற மகாபாரதம் நூலில் 87 வது பக்கத்தில் சூத்திரன் என்பவன் பார்ப்பனர்களுக்கு சேவை செய்ய வேண்டும். அடிபணிந்து நடக்க வேண்டும். எதிர்த்து கேள்விகளைக் கேட்கக் கூடாது.

அதோடு மட்டுமில்லாமல் பொதுவாக, ஆர்.எஸ்.எஸ். தனியாக இல்லை இல்லை, நாங்கள் சாதிப்பாகுபாடே பார்ப்பதில்லை. இவர்களுடைய விழிப்புணர்வு எப்போது வருகிறது என்று கேட்டால், இந்த முகாமில் இருந்து, சனாதனம் என்பது சாதி அடிப்படையில் கொண்டது என்று கண்டனம் தெரிவித்தால், அய்யய்யோ இந்து மதத்திற்கு ஆபத்து என்று சொல்கிறார்கள் இல்லையா, இவர்களில் ஆர்.எஸ்.எஸ்.பிரச்சாரமாக அங்காங்கே போய் பேசுகின்ற ஆர்.வி. எஸ். மணி என்பவர், 2016 நவம்பர் 26 அன்றைக்கு சொல்கிறார், 'வண்ணான் பிள்ளை வண்ணானாகத்தான் இருக்க வேண்டும். நீ வேறு வேலைக்கு போய்விட்டால் துணியை யார் வெளுக்கிறது' என்று இப்படி வரிசையாக ஒரு சாதியைக் குறிப்பிட்டு அவர் சொல்கிறார். அப்படி சொல்லும் போது இந்த நபர்கள் யாரும் வெளிப்படையாக வந்து கண்டித்து, அய்யய்யோ, இந்து மதத்தைப் பற்றி இப்படி பேசினீர்கள் என்றால் திட்டுவார்கள் என்று இவர்கள் யாரும் பேசவில்லை.

இந்த ஆபத்பாண்டவர்கள் திடீரென்று ஒன்றும் பேசவில்லை. குடியரசுத்தலைவர் முர்மு அவர்களை உள்ளே விடவில்லை, இது இன்றைக்கு நேற்று அல்ல, இவர்கள் இன்றைக்கு பிரமாதமாக சொல்கிறார்கள் இல்லையா, இரண்டு மூன்றை சொல்லி விடுகிறேன்.

சௌக்கார் குலத்து மக்கள்- பட்டியல் சாதி மக்கள் குளத்தில் தண்ணீர் எடுக்கப் போகிறார்கள். தண்ணீர் எடுக்கப் போன உடனே, அந்த குளம் அசுத்தமாகி விட்டது. உடனே என்ன செய்தார்கள். 108 அண்டா-பானையில் பஞ்சகவியம் என்று சொல்லி மாட்டுச் சானம், மாட்டுமூத்திரம், அதற்குப் பிறகு தயிர், பாலு இப்படி எல்லாவற்றையும் சேர்த்து கலந்து அந்த சுத்தமாக இருக்கின்ற தண்ணீரில், தலித்துகள் - பட்டியலினத்தவர்கள் தொட்டார்கள் எனச் சொல்லி அதில் கலக்குகிறார்கள்.

அப்போது அம்பேத்கர் என்ன சொல்கிறார், இதனை கடுமையாக கண்டிக்க வேண்டும் என்று சொல்கிறார். அம்பேத்கர் அவர்களுக்கு அந்த மக்கள் மீது உண்மையிலேயே அன்பு இருந்த காரணத்தினால், இறங்கி நான் கடுமையாக போராடுவேன் என்று சொன்னவுடன், கடுமையான போராட்டமா, கொஞ்சம் பொறுமையாக இருங்கள் என்று சொன்ன போது, அவர் என்ன சொல்கிறார், இதோ பாருங்கள், இப்படி பேண்டேஜ் போடுகின்ற வேலையெல்லாம் நடக்காது.

இதற்கு ஒரு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிய பிறகு தான், அவர் அதற்குப் பிறகு 1927 டிசம்பர் மாதம் 25, 26 இல் மனு தர்மத்தை கொளுத்துகிறார். நான் சொல்கிறேன். இவர் இருக்கிறார். இவர் அமைப்பு இருக்கிறது, எந்த அமைப்பு என்று இவர் சொல்லவில்லை, ஏதோ ஒரு அமைப்பு ஆர்.எஸ்.எஸ். சங்பரிவார் அமைப்பு இருக்கிறது. வரலாற்றில் ஒரு முறையாவது இவர்களில் யாராவது இந்த மனு தர்மம் தொடர்ச்சியாக இதை வைத்தே நூற்றாண்டாக கேள்வி கேட்டுக்கிட்டு இருக்கிறார்கள். இந்து மதத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, இதனை கொளுத்துவோம் என்று ஒரு முறையாவது செய்து இருப்பார்களா? இந்து மதத்தை என்றைக்காவது சீர்படுத்தி இருக்கீர்களா?

**நெறியாளர் தமிழினியன்:** சுமந்த், ரவி அவர்களும் இங்கே பேசும் போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரும், இந்து அமைப்பினரும் இதற்கு கண்டனம் தெரிவித்து பேசி இருக்கிறார்கள், பல முறை பேசி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள், பலர் பேசி இருக்கிறார்கள்.

**ஊடகவியாளர் மகிழ்நன் :** எங்கே பேசிஇருக்கிறார்கள்.?

**நெறியாளர் தமிழினியன்:** பேசி இருக்கிறார்கள்.

**ஊடகவியாளர் மகிழ்நன்:** எங்கேயும் பேசவில்லை. நான் சொல்கிறேன் கேளுங்கள், இந்த நாட்டினுடைய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், அவர் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார். அந்தப் புத்தகத்தில் என்ன எழுதி இருக்கிறார் என்று கேட்டால் "நீங்கள் துப்புரவு தொழில் செய்கிறீர்கள் இல்லையா, அது கடவுளுக்கு செய்கின்ற தொழில்" என்று குறிப்பிட்டு இருக்கிறார். அதனை அவர் போய் செய்யட்டுமே. அவருடைய கட்சிக்காரர்கள் செய்ய வேண்டியதுதானே. என்றைக்காவது அவர்கள் கட்சிக்காரர்கள் 'எப்படிப்பா சொல்வீர்கள்? நம்ம இந்து மக்கள், அவர்களைப் போய் இப்படி கேவலமாக பேசுகிறீர்களே என்று யாராவது என்றைக்காவது அவர்களை கண்டித்து இருக்கிறார்களா?

அண்ணல் அம்பேத்கர் சொல்கிறார், சனாதனம் என்பது என்ன? யூதர்களுக்கு எதிராக இட்லர் பயன்படுத்திய anti semistism (இனவெறுப்பு)- அது தான் சனாதனம்.

'Indus' என்பது பல மதங்களின் தொகுப்பு தான். அதற்குப் பிறகு 'இந்து' என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவ்வளவுதான். அது ஒருமதம் கிடையாது. சனாதன தர்மம் ஏற்றத் தாழ்வை தொடர்ந்து போதிக்கிறது. அதனை யொட்டி,இவர்கள் தொடர்ச்சியாக என்ன சொல்கிறார்கள்? சாதி ஒழிப்பு என்று வைத்து இருக்கலாமே, பார்ப்பனீய ஒழிப்பு என்று வைத்து இருக்கலாமே, நீங்கள் ஏன் அப்படி வைக்கவில்லை? சாதி ஒழிப்பு என்று போட்டால் சுமந்த் ராமன், ரவியும் கலந்து கொள்ள முடியாது. எங்களுக்கு யாரும் ஆலோசனை சொல்ல வேண்டாம்.

இது ரொம்ப நீண்ட காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. பார்ப்பனீயம் எங்கே இருக்கிறது? சாதி ஏற்றத் தாழ்வு எங்கே இருக்கிறது? அது கடந்த காலம் எங்கோ நடந்த தவறு, இப்போ விஸ்வ கர்மா என்கின்ற ஒரு திட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம், இங்கே இருக்கின்ற பெரும்பாலான பார்ப்பனரல்லாத மக்களை குலக் கல்விக்குள் தள்ளுகின்ற ஒரு திட்டம். திடீரென்று ஓடிவந்து அய்யய்யோ சனாதனத்தை எதிர்க்கிறீர்கள்? என்று பதற்ற மடைகின்ற யாருக்கும் சொந்த இந்து மக்கள் பெரும்பான்மையாக இருக்கின்ற மக்கள், ஏழைகள், உழைக்கின்ற மக்கள்-அவர்களை குலத் தொழிலுக்குள் தள்ளுவது , அவர்களை இன்னொரு கட்டத்துக்கு வராமல் தடுக்கும் திட்டத்தைப் பற்றி எந்தக் கண்டனமும் இல்லை.

இன்னொன்று பார்ப்பனீயம் எங்கே இருக்கின்றது. நாங்கள் வந்து கடந்த காலம் தானே நீங்கள் இராமர், சம்பூகனை கொலைசெய்தார் என்று சொல்றார்களே அது இப்போது நடக்கவில்லையே, அது கடந்த காலம் திரேதாயுகத்தில், இப்போது இல்லை என்று சொல்கிறார்கள், துரோணாச்சாரியார் ஏகலைவன் கட்டை விரலைக் கேட்டார், துரோணாச்சாரியார் பெயரில் விருது கொடுக்கிறார்கள். நீக்கச் சொல்லி கோரிக்கை வந்ததா, வரவில்லை. நீங்கள் கர்ணனைக் கொன்ற அர்ஜுனன் பெயரில் கொடுக்கின்றீர்கள், எங்கேயாவது ஏகலைவன் பெயரிலோ அல்லது சம்பூகன் பெயரிலோ விருதுகளோ, அல்லது பாராட்டுக்களோ எதுவுமே நடக்கவில்லை.

நீங்கள் சொன்னால் குரு என்று சொன்னார், துரோணர் என்று சொல்கிறீர்கள், கட்டை விரலைப் பெற்ற துரோணரை இன்றைக்கு பாராட்டிக்கிட்டு இருக்கிறீர்கள், இன்னொரு பக்கம் தீட்சதர்கள் குழந்தைத் திருமணம் செய்கிறார்கள் என்று ஒரு புகார் வந்தால், நீங்கள் அந்தப் பக்கம் எப்படி தீட்சதர்களை காப்பாற்றலாம். இவை எல்லாமே ஒரு வகையில் சாதி ஏற்றத்தாழ்வுகளை ஆதரிப்பதாகும்.

இன்னொரு விஷயம், மோடி அவர்களுக்கு இந்த குறிப்பிட்ட விஷயத்தை திசைதிருப்புவதற்கு பயன்பட்டு இருக்கிறது. ஏழரை இலட்சம் கோடி சி.ஏ.ஜி. அறிக்கை வந்து இருக்கிறது - தொடர்ச்சியாக பி.ஜே.பி. கவர்ண்மென்ட்டை அம்பலப்பட்டு வரும் சூழலில் இப்படிப்பட்ட ஒரு கவசத்தை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்.

இவ்வாறு விவாதத்தில் ஊடகவியாளர் பா.ம. மகிழ்நன் தனது ஆதாரப்பூர்வமன கருத்தை பதிவுசெய்தார்.

---

### சேலம் மத்திய மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்!

## சேலத்தில் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், செப். 11-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட இயக்க முன்னோடிகள் டாக்டர்.நடேசனார், டி.எம்.நாயர், பிட்டி.தியாகராயர் போன்ற தலைவர்களை தொடர்ந்து தந்தை பெரியார் அவர்கள் திராவிட இயக்க கொள்கைகளை தமிழ் மண்ணில் பட்டி தொட்டியெங்கும் பரப்பினார். கழகத்தை தோற்றுவித்து தமிழ் இனம், தமிழ் மொழி என்கிற உணர்வுகளை ஊட்டி வளர்த்து தமிழர்களின் பாதுகாப்பு இயக்கமாம் இந்த மாபெரும் இயக்கத்தை ஆட்சி அரியணையில் அமர்த்திய வர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களை தொடர்ந்து தியாகத்தால், உழைப்பால் உயர்ந்த தலைவர் தளபதி அவர்கள் உலகம் பாராட்டும் முதல்வராக திகழ்கிறார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று தமிழ்நாடு பெயர் மாற்றம், இருமொழிக் கொள்கை, சுயமரியாதை, திருமண சட்டம் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி காட்டினார். இன்றைக்கு தமிழ் இனம் தலை நிமிர்ந்திருக்கிறதென்றால் அதற்கு அண்ணா அவர்கள் தர்ன அடித்தளமிட்டவர். அத்தகைய ஆற்றலும், திறமையும், பண்பும், கனிவும் கொண்ட பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 15ஆம்நாள். ஆம் இந்த நாள் தமிழனுக்கு திருநாள்.

செப்டம்பர் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 08.30 மணிக்கு சேலம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட சேலம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, கோட்டக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் வருகை தந்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

### அரியலூர் மாவட்டம்

## மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு



அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (11.09.2023 - திங்கள்கிழமை) மாலை 4.00. மணியளவில் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் சுஜாதா கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார். அதுபோது மாவட்ட, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: 1, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பெண்களை அதிக அளவில் உருப்பினர்கள் சேர்த்தல்.

2, தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் நடத்துவது.

**அமைச்சர் சா.சி.சிவசங்கர்**
செயலாளர்
அரியலூர் மாவட்ட தி.மு.க.

---

## ரூ.5,171 கோடி -அறநிலையத்துறை மீட்ட சொத்து விவரம்!

### இரண்டாவது புத்தகத்தை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டார்!

சென்னை, செப். 11-

கடந்த 12 ஆண்டுகளாக திருக்கோயில்களுக்கு வரப்பெற்ற பலமாற்று பொன்னினங்களில் பயன்பாடற்ற பொன்னினங்களை ஓய்வுப் பெற்ற நீதியரசர்களின் முன்னிலையில் கணக்கெடுத்து ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி அந்தந்த திருக்கோயில்களின் பெயரில் தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டு அதன் வட்டித்தொகை திருக்கோயிலின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வட்டித்தொகையாக ஆண்டிற்கு ரூ.2.25 கோடியும், இருக்கன்குடி, பெரியபாளையம், திருவேற்காடு மற்றும் மாங்காடு திருக்கோயில் களுக்கு வட்டித்தொகையாக ஆண்டிற்கு ரூ.2.06 கோடியும் கிடைக்கப்பெறு கிறது. இப்படி திருக்கோயிலுக்கு வருமானங்களை பெருக்குகின்ற வகையில் எத்தகைய தடை வந்தாலும் உடைத்தெறிந்து இந்து சமய அறநிலையத்துறை செயலாற்றி வருகிறது.

ஆன்மிகத்தை வைத்து தமிழக மண்ணில் அரசியல் செய்யலாம் என்று நினைத்த சிலருக்கு அது கை கூடவில்லை. இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு 2 ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. வரும் 10 ஆம் தேதி நடைபெறும் மேற்கு மாம்பலம், காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு 1,000 ஆவது குடமுழுக்காகும்.

அமைச்சரவை பதவியேற்ற பின்போது அனைவருக்கும் ஒரே மாதிரியான உறுதிமொழி தான். ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு உறுதிமொழி என்று இல்லை. எந்த வகையிலும் அரசியல் சாசன சட்டத்தை மீறுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. எங்களுடைய தலைவர்களும் எங்களுக்கு அரசியல் சாசன சட்டத்திற்கு உட்பட்டு தான் செயல்பட வேண்டும் என்று போதித்திருக்கின்றார். ஆகவே எங்களுடைய கோட்பாடுகள், கொள்கை மற்றும் லட்சியங்களிலிருந்து ஒருநாளும் பின் வாங்க மாட்டோம், கட்டுப்பாட்டுக்குள் தான் செயல்படுவோம். ஆகவே எங்கும் அரசியல் சாசன உறுதிமொழியை மீறுகின்ற சூழ்நிலை ஏற்படவும் இல்லை, அப்படி நடந்து கொள்ளவும் மாட்டோம்.


நாங்கள் கருத்தியல் ரீதியான மோதலுக்கு தயாரானவர்களே தவிர இது போன்ற தேவையற்ற வாதங்களுக்கு எங்களை நாங்கள் ஆட்படுத்திக் கொள்வதில்லை. அண்ணாமலைக்கு அவர்களின் பெயரில் இருக்கின்ற ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு உதாரணத்தை கற்பிக்க முடியும். ஆனால் எங்களின் பணி அது அல்ல நாங்கள் மக்களை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறோம்.

சனாதனம் என்பது வேறு, இந்து மதம் என்பது வேறு. நான் இரண்டு நாட்களுக்கு முன்பு கூட இதற்கு வாழைப்பழத்தை உதாரணமாக சொன்னேன். சனாதனத்தில் இருக்கின்ற பெண் கல்வி மறுப்பு, கணவன் இறந்தவுடன் உடன் கட்டை ஏறுதல், பெண்களுக்கு எதிரான சமூகநீதி இவைகளை தான் நாங்கள் எதிர்க்கிறோமே தவிர சனாதனத்தை ஏற்றுக் கொண்டவர்களை எல்லாம் நாங்கள் எதிர்ப்பதாக அர்த்தமாகாது. ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளியாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தெளிவான அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள். அதுவே போதுமானது. வேலையற்ற வீணர்களின் வார்த்தைகளுக்கு பதில் சொல்லிக்கொண்டு எங்களுடைய நேரத்தை நாங்கள் செலவிட விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

---

## நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (12.9.2023 செவ்வாய்க் கிழமை) மாலை 5 மணியளவில் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள். செப்டம்பர் 17 முப்பெரும் விழா
கலைஞர் நூற்றாண்டு விழா
கழக ஆக்கப்பணிகள்

**என்.கௌதமன்**
செயலாளர்
நாகை மாவட்ட தி.மு.க.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், கோலியனூர் பனங்குப்பம் கிளைச் செயலாளர் ஆர். பாலு மகன் திருமண விழாவை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களும் திருமதி.விசாலாட்சி, பொன்முடி ஆகியோர் தலைமையேற்று நடத்தி வைத்து வாழ்த்தினார்கள். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், குமார்ஸ்கல்வி நிறுவனர் கோத. குமார், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாராபுரம் சாலையில் மேட்டுக்கடை முதல் குண்டடம் வரை இருவழிப்பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்பாட்டு செய்யப்பட்டதை திறந்து வைத்ததை தொடர்ந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ்வார்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சிசித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர், 4வது மண்டல குழு தலைவர் இல.பத்மநாபன், குண்டடம் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சந்திரசேகரன், சிவ.செந்தில்குமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.கருணாகரன், பேரூர் கழக செயலாளர் அன்பு, ஒன்றிய பொருளாளர் பாலசுப்பிரமணியம், மாவட்ட விவசாய அணி துணை தலைவர் ஈஸ்வரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் மயில்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாநகராட்சி சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ்

# ரூ.254.10 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித்திட்டப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

திருப்பூர். செப். 11-

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.254.10 கோடி மதிப்பீட்டில் செயல் படுத்தப்பட்டு வரும் பல் வேறு வளர்ச்சித்திட்டப்ப ணிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பி னர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சிசித்தலை வர் தா.கிறிஸ்துராஜ் தலை மையில், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ் குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் 07.09.2023 வியாழக்கிழமை அன்று திருப்பூர் மாநகராட்சி பகு திகளில் சீர்மிகு நகரத்திட் டத்தின் கீழ் ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப் பட்ட தென்னம்பாளையம் மீன் சந்தை, முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தில் ரூ.17.71 கோடி மதிப்பீட் டில் கட்டப்பட்டுள்ள பல அடுக்கு வாகன நிறுத்தும், முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் எதிரில் ரூ.27.05 கோடி மதிப்பீட்டில் மேம்ப டுத்தப்பட்டு வரும் தினசரி மார்க்கெட் பணி, திருப்பூர் மாநராட்சி 3ம் மண்டலம் மற்றும் 4ம் மண்டலப்பகுதி களில் ரூ.207.15 கோடி மதிப்பீட்டில் 17 எண்ணிக் கையிலான மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகள் கட்டு தல் மற்றும் குடிநீர் விநி யோக குழாய் பதிக்கும் பணி, முத்தமிழறிஞர் கலை ஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் எதிரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் கட்டப் பட்டு வரும் 10,00,000 லிட் டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, செல்லாண்டியம் மன் துறை ராஜீவ் நகர் பகு தியில் அம்ரூத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 10,00,000 லிட்டர் கொள்ள ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அமர்ஜோதி கார்டன் காளி யப்பா நகர் பகுதிகளில் அம் ரூத் திட்டத்தின் கீழ் கட் டப்பட்டு வரும் 20,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டும் பணி என ரூ.254.10 கோடி மதிப்பீட்டில் செயல்படுத் தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணி களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்தா வது : தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் தமிழக மக்க ளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்ட மானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப் பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. திருப்பூர் மாநகராட்சியை பொறுத்த வரையில் குடி நீர்த்திட்டப்பணிகள் முடி யும் தருவாயில் உள்ளது. இப்பணிகள் முடிந்த பிறகு மாநகர பகுதிகளில் குடி நீர்த்தட்டுப்பாடின்றி பொது மக்களுக்கு வழங்கு கின்ற சூழ்நிலை ஏற்படும். இனி வரும் காலங்களில் குடிநீர்தடையின்றி கிடைப் பதை உறுதி செய்திடும் வகையில் பணிகள் நடை பெற்று வருகின்றன.

மேலும், அடிப்படை தேவைகள் குறித்து தனி கவ னம் செலுத்தவும், நடை பெற்று வரும் திட்டப்பணி களை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட் டிற்கு கொண்டு வர வேண் டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித் தார். இந்த ஆய்வில் மாநக ராட்சி துணை மேயர் இரா. பாலசுப்பரமணியன், தலை மைப்பொறியாளர் (பொ) செல்வவிநாயகம்,

உதவி ஆணையர் வினோத், செயற்பொறியா ளர்கள் வாசு குமார், கண் ணன், உதவி பொறியாளர் ஆறுமுகம், மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், திருப்பூர் வடக்கு ஒன்றிய கழக செய லாளர் விஸ்வநாதன், பகுதி கழக செயலாளர் கொ. இராமதாஸ், பல்லடம் நகர கழக செயலாளர் ராஜேந் திர குமார் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வா கிகள், கழக துணை அமைப் புக்களின் அமைப்பாளர் கள், துணை அமைப்பா ளர்கள் பலர் கலந்து கொண் டனர்.

### பெரும் ஆதரவு பெற்ற தலைவர்: வாக்கெடுப்பு!




இன்று இந்தியா முழுவதும் உள்ள
பிற்படுத்தப்பட்ட இந்துக்கள்
தங்களது நம்பிக்கை நட்சத்திரமாக
உதயநிதி ஸ்டாலின் அவர்களை கொண்டாடி வருகின்றனர்
இந்தியா முழுவதும் உதயநிதி ஸ்டாலின்
கட் அவுட்டுக்கு பாலாபிஷேகம் புஷ்பாஞ்சலி செய்து வருகின்றனர்
வட இந்தியாவிலும் இது நடைபெறுகிறது.
ஊடகங்கள் மக்கள் மத்தியில்
பெரும் ஆதரவு பெற்ற தலைவர்
மோடியா, உதயநிதி ஸ்டாலினா என்று
இணையதளம் மூலம் வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை! செ.இராமலிங்கம் எம்.பி. முன்னிலை!

# கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவோம்!

## மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை. செப்.11-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் கள் கலந்துரையாடல் கூட் டம் மயிலாடுதுறை அபிராமி திருமண மண்ட பத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மயிலாடு துறை நாடாளுமன்ற உறுப் பினர் செ.இராமலிங்கம், ஒன்றியக் கழகச் செயலா ளர்கள் செல்ல.சேதுரவிக் குமார், மலர்விழிதிருமாவ ளவன், என். இளையபெருமாள், ஞான. இமையநாதன், ப.முருக மணி, மூவலூர் மூர்த்தி, பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக், அமிர்த. விஜயகுமார், மங்கை எம். சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஏ.ஜி.ஜெ.பிர பாகர், பஞ்சுகுமார், சீர் காழி நகர கழகச் செயலா ளர் ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம். அன்புச்செழியன், எம்.சம்சு தீன், முத்துராஜா, அண் ணாதுரை ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

மயிலாடுதுறை நகரக் கழ கச் செயலளார் குண்டா மணி (எ) என்.செல்வராஜ் வரவேற்றார். கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம் புகார் சட்ட மன்ற உறுப்பி னர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி கூட்டத் தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற்றப் பட உள்ள தீர்மானங்கள் குறித்து பேசினார்.

கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவ சாய அணி இணைச் செய லாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலா ளர் அணி துணைச் செயலா ளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், எம்.எம்.சித்திக், ஏ. சி.என்.சிவபாலன், தலை மைச் செயற்குழு உறுப்பி னர்கள் இராம.இளங்கோ வன், ஜி.என்.ரவி, முத்துமகேந்திரன், மாவட் டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர்,

தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பி னர்கள் எஸ்.சங்கரநாராய ணன், பி.சிவதாஸ், எஸ். சுவாமிநாதன், அ.காந்தி, ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின் சென்ட், எஸ்.வெற்றிவேல், அர்சத், பி.கென்னடி, சுபா நெடுஞ்செரியன், அரசு வழக்கறிஞர்இராம.சேயோன், மாவட்ட ஊராட்சி தலை வர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழுதலைவர்கள் காமாட்சிமூர்த்தி, நந்தினி ஸ்ரீதர், கமலஜோதிதேவேந் திரன், கே.மகேந்திரன், வி.ஜெயபிரகாஷ் மற்றும் சார்பு அணிகளின் அமைப் பாளர்கள் துணை அமைப் பாளர்கள் கலந்து கொண்ட னர். முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் மருது (எ) எம்.கே.மருத முத்து நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் வான் போன்ற புகழுக்கு சொந்தக்காரர், மலை போன்று நிலை குலையாத மனஉறுதியுடன் வாழ்ந்த வர், நீர் போன்று தமிழ் மக் களிடத்திலே அன்பை பொழிகின்ற இயல்பை பெற்றவர், மோகம் போன்று கவிதை வானில் சுற்றி வந்தவர், கடல் போன்று ஆழ்ந்த அறிவிற்கு உரிமை உடையவர், அத்த னைக்கும் சொந்தகாரர் முத் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 14 வயதில் தமி ழுக்கு கொடி பிடித்து தமி ழுக்கும், தமிழ் மக்களுக்கும் 80 ஆண்டுகாலம் உழைத் திட்ட தான் நின்ற 13 முறையும் சட்ட மன்ற தேர் தலில் வெற்றிப் பெற்று 5 முறை தமிழ்நாடு முதல்வ ராக பொறுப்பு ஏற்று தமிழ் நாடு முழுவதும் பாதுகாக் கப்பட்ட குடி நீர் வழங்கிய, கை ரிக்ஷவை ஒழித்திட்ட, மகளிர் சுய உதவிக்குழுவை உருவாக்கிய, தமிழ் மொழியை செம்மொழி யாக்கிய, காவிரி நடுவர் மன்றம் அமைத்து காவிரி பிரச்சனை தீர்வுக்கு வித் திட்ட, பெண்களுக்கு சொத்தில் பங்கு என்று தனது ஆட்சியில் எண்ணில் அடங்கா சாதனைகளை படைத்திட்ட சாதனை தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவை சார்பு அணிகளுக்கு என்று தலை மைக் கழகம் அறிவித்துள்ள வாறு நிகழ்ச்சிகளை மயி லாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து அணி களை சேர்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தங்கள் அணிகளை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் களை ஒருங்கிணைத்து மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செய லாளர்கள் அலோசனை பெற்ற நிகழ்ச்சிகளை சிறப் பாக நடத்திட வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் உள்ள 31 ஆயிரம் பள்ளிக ளில் படிக்கும் 17 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் முலமைச் சரின் காலை உணவு திட் டத்தை தொடங்கி வைத்த தமிழக முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்க ளுக்கு நன்றியை தெரிவித் துக் கொள்வது என்றும், மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி செயல்வீ ரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை யாற் றிய கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டா லின் அவர்களுக்கு வாழ்த் துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வது என்றும் கழக இளைஞர் அணி செயலாளர், இளை ஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச் சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு கொலை மிரட்டல் விட்ட உத்தரப்பி ரதேசத்தை சேர்ந்த போலி சாமியார் பரமஹன்ஸ்ஆச் சார்யாவிற்கு கடும் கண்ட னத்தை தெரிவித்து கொள் வது என்றும், வரும் செப்டம்பர் 15ம் தேதி தமிழ்கத்தில் உள்ள மகளி ருக்கு மாதாமாதம் ரூ. 1000 வீதம் கலைஞர் மகளிர் உரி மைத் தொகை திட்டத்தை தொடங்கி வைக்க உள்ள கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்ததுக்களையும் நன்றி யையும் தெரிவித்துக் கொள் வது என்றும், மயிலாடுதுறை மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தொடக்க விழாவை கழகத் தலைவர் ஆணைக்கினங்க மயிலாடுதுறை மாவட்டத் தில் சிறப்பாக நடத்திடுவது என்றும், மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் செப்டம்பர் 16ம் தேதி செம்பனார்கோயில் நடத்தப்பட உள்ள வேலை வாய்ப்பு முகாமில் மயிலாடு துறை மாவட்டத்தில் உள்ள ஆயிரக்கணக்கான இளை ஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வேலையில் லாம் உள்ள அனைத்து இளைஞர்களை அதிக அள வில் பங்கேற்க செய்திடுவது என்றும், இந்தியாவில் முதல்வருக்கு எல்லாம் முதல்வராக உள்ள இந்தியா கூட்டணியின் முக்கிய தலைவர்களின் ஒருவதாக உள்ள கழகத் தலைவர் தள பதி அவர்களை கரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் வரும் நாடாளு மன்ற தேர்தலில் 40ம் நமதே என்ற எண்ணத்தோடு மயி லாடுதறை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் கழகத் தலைவர் கைக்காட் டும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாத்தில் வெற் றிப் பெற இன்றிலிருந்து மயிலாடுதுறை மாவட்டத் தில் அனைத்து பகுதியிலும் சார்பு அணிகளின், அமைப் பாளர்கள், துணை அமைப் பாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர் ஆலோ சனைப் படி திண்ணை பிரச் சாரங்கள், தெரு முனை பிரச்சாரக் கூட்டங்கள், முத் தமிழ் அறிஞர் கலைஞர், கழகத்தலைவர் அவர்களின் ஆட்சியின் சாதனைகளை யும், ஒன்றிய அரசு மக்க ளுக்கு இழைக்கும் அநீதீக ளையும் பொதுமக்களிடம் தின்னை பிரச்சாரங்கள், தெரு முனை பிரச்சார கூட் டங்கள், பொதுக்கூட்டங் கள் நடத்தி மயிலாடுதுறை நாடாளுமன்ற வேட்பா ளரை அதிக வாக்குகள் வித் தியாசத்தில் வெற்றிப் பெற பாடு படுவது என தீர்மா னங்கள் நிறைவேற்றப் பட்டது.



நாகை மாவட்டம் நாகை சாமாந்தாம்போட்டை சேவபாரதி, டாட்டா நகர், ஆரியநாட்டு தெரு உள்ளிட்ட மீனவ கிராமங்களில் இருந்து அ.தி.மு.க., பி.ஜே.பி., அ.ம.மு.க., ஆகிய கட்சிகளை சேர்ந்த 35 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் எஸ்.என்.மோகன்தாஸ், நாகை நகர்மன்ற உறுப்பினர்கள் என்.சுரேஷ், முகுந்தன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் ப.ஞானமணி, குமார், பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் இன்று 11.09.2023 (திங்கள் கிழமை) மாலை 3.00 மணியளவில் ஒசூர் மீரா மஹாலில் நடைபெற உள்ளது.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னிலை வகிப்பர்.

எனவே மாநில நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. 25.09.2023 அன்று கழக இளைஞர் அணி மாநில செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை

2.புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகம்

3.கழக ஆக்கப்பணிகள்

**ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ.**
செயலாளர்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க.



மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கங்காதாரபுரம் ஊராட்சி கொண்டங்கி வடக்கு தெருவில் வசித்து வரும் கிருஷ்ணமூர்த்தி என்பவரது வீடு தீ விபத்தில் சேதமடைந்தது. இதையடுதது அந்த குடும்பத்திற்கு நிதி உதவி மற்றும் பொருட்களை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றியச் செயலாள்ா ஏ.ஆர்.ராஜா, குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் உள்ளனர்.


நாள் : 11 – 9 – 2023,
திங்கட்கிழமை
இடம் : பரமக்குடி
ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடிய
சமூக நீதிப் போராளி - தியாகி
இமானுவேல் சேகரனார்
அவர்களின் 66–ம் ஆண்டு
வீரவணக்க நாள்
WE FIGHT FOREVER FOR
SOCIAL JUSTICE
நினைவேந்தல்
நிகழ்விற்கு வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
அன்புடன்... என்.கயல்விழி செல்வராஜ்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்

# திராவிட மாடல் அரசு 34

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**






## புத்தொளி பாய்ச்சும் புத்தொழில்!

நன்றாகப் படித்து முடித்து அரசு வேலைக்குச் செல்லவேண்டும் என்று நினைப்பவர்கள் பலர். வேறு சிலர், பிரபல தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைத் தேடுவார்கள். வெகு சிலர் மட்டுமே, தாங்களே ஒரு நிறுவனத்தை நடத்தி, அதன் மூலம் பத்து பேருக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்று வாய்ப்புகளை உருவாக்குவார்கள்.

தமிழ்நாட்டில், முதல் இரண்டு பிரிவினர்களுக்குப் பஞ்சம் இல்லை. ஆனால், மூன்றாவது பிரிவினர்தான் மிகவும் குறைவாக இருந்தனர். அந்த நிலை இன்று மெல்ல மெல்ல மாறி வருகிறது. குறைந்த முதலீடு, ஓரளவுக்குப் போதுமான மனிதவளம், கிராமப்புறங்களில் இருந்துகொண்டுகூட உலகின் எந்த மூலையிலும் நமது வியாபாரத்தை மேற்கொண்டுவிட முடியும் என்கிற வசதி ஆகியவற்றால் பல இளைஞர்கள் புதிய புதிய சிந்தனைகள், நவீனமான முயற்சிகளுடன் சொந்தமாகத் தொழில் தொடங்க ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக இருப்பதே **‘தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்’**.

2021-ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கப்பட்ட இந்த இயக்கம், மே மாதத்தில் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ அமைந்த பிறகுதான் உயிர்ப்புடன் இயங்கத் தொடங்கியது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

### புதிய தொடக்கமும்... நவீன முயற்சியும்...

மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அதை நிறைவேற்றும் வகையில் முற்றிலும் ஒரு புதுமையான சிந்தனையோடு தொடங்கப்படும் தொழில்தான் புத்தொழில் (ஸ்டார்ட் அப்).

புத்தொழில் என்பதற்கு ஃபேஸ்புக், ஓலா, சொமேட்டோ போன்றவற்றை உதாரணங்களாகச் சொல்லலாம். டி.சி.எஸ்., இன்ஃபோசிஸ் என இன்று பிரபலமாக இருக்கும் நிறுவனங்கள்கூட அவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் புத்தொழில்கள்தான். அந்தப் புதிய சிந்தனையைப் பின் தொடர்ந்து பல நிறுவனங்கள் வரும்போது, அவை புதிய துறையாக உருவெடுக்கும். **‘சமூக ஊடகம்’** என்ற களம் அப்படித்தான் வளர்ந்தது.

இப்படித் தொடங்கப்படும் நிறுவனங்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கித் தருவது, பயிற்சிகள், வழிகாட்டுதல்கள் வழங்குவது, சந்தைத் தொடர்புகளை ஏற்படுத்துவது போன்றவற்றைச் செய்வதுதான் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம். இது **‘ஸ்டார்ட் அப் தமிழ்நாடு’** என்ற பெயரில் விளம்பரப்படுத்தப்படுகின்றது.

### உள்ளடக்கிய தொழில்முனைவு வளர்ச்சி

வாழ்விடம், பாலினம், சாதி என அனைத்து வேறுபாடுகளையும் கடந்து அனைவரையும் உள்ளடக்கிய தொழில்முனைவு வளர்ச்சிதான் ‘ஸ்டார்ட் அப் தமிழ்நாடு’ நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள். அதன்படி, ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள், மகளிரை முதன்மைப் பங்குதாரர்களாகக் கொண்டிருக்கும் நிறுவனங்கள், பசுமைத் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்கள், பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர்கள் தொடங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு **‘ஆதார நிதி’** வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது.

பாரம்பரிய தொழில்முறைகளை நவீன தொழில்நுட்பங்களின் துணையுடன் மேம்படுத்துவதன் மூலம் பெரும்பான்மையான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்கள் ஊரகப் பகுதிகளிலிருந்து நகர்ப்புறப் பகுதிகளுக்கு இடம்பெயர்வதைத் தடுக்க இயலும். இதன் மூலம் **‘சமூகநீதியுடன் கூடிய சமச்சீர் தொழில் வளர்ச்சி’** எனும் இலக்கை ‘திராவிட மாடல் அரசு’ 2026-க்குள் எட்டிவிடும்.

### இணைப்புப் பாலமான இயக்கம்

தொழில்முனைவோர்களுக்குத் தொழில் தொடங்க நிதி உதவி அளிப்பதுடன் நின்றுவிடாமல், அந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் துணை நிற்கிறது **‘ஸ்டார்ட் அப் தமிழ்நாடு’**. புதுயுகத் தொழில்முனைவுப் பயணத்தில் தொழில்முனைவோர்களுக்குத் துறைசார் அறிவும் அனுபவமும் கொண்ட அறிஞர்களின் வழிகாட்டுதல்களைப் பெறுதல் அவசியம்.

அதன் அடிப்படையில், பல்வேறு துறைசார்ந்த வழிகாட்டுதல்களை வழங்கத் தயாராக இருக்கும் நிபுணர்களுடன், தொழில்முனைவோர்களை இணைக்கும் வகையில் **‘மெண்டார் டி.என்’ (MENTOR TN)**, புத்தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்தி, வணிகச் சந்தையில் தனித்துவமான ஓர் இடத்தை அடைவதற்கு வழிகாட்டும் **‘பிராண்ட் லேப்ஸ்’ (BRAND LABS)** நிகழ்வு, புத்தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் **‘லான்ச் பேட்’ (LAUNCH PAD)** நிகழ்வு, அரசு, சமூகம் மற்றும் தொழில் துறைகளில் நீண்ட காலமாக நிலவும் சிக்கல்களுக்குப் புதுமையான தீர்வுகளைக் கண்டடையும் வகையில் **‘நிரல் போட்டிகள்’ (HACKATHON)** நிகழ்வு எனப் பல பயிற்சிகளை, கருத்தரங்குகளை, நிகழ்ச்சிகளை இந்த இயக்கம் நடத்துகிறது.

போலவே, திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்று வீதம் மூன்று நவீன பொறியியல் புனைவக நிலையங்களை (ஃபேப்ரிகேஷன் லேப்ஸ்) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஒரு பகுதியாக, மாணவர்கள் தங்களது தொழில் சிந்தனைகளை, மாதிரித் திட்டமாக உருவாக்கிக் கொள்ள, பயிற்சிப் பிரிவு திறக்கப்படும். இந்த நிலையங்களை மாணவர்கள் மட்டுமின்றி, அவை அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள புத்தொழில் நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும், வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் தொழில்முனைவோர்களுக்கு உதவும் வகையில், அவர்களை **‘ஏஞ்சல் முதலீட்டாளர்கள்’** என்ற முறையில் ஒருங்கிணைத்து, அவர்களது முதலீடுகளைச் சரியான திட்டங்களில் முதலீடு செய்ய இந்த இயக்கம் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது.

‘வேலை வாய்ப்பில்லை’ என்று சொன்னால், ‘விஸ்வகர்மா’ திட்டத்தைக் கொண்டு வருகிறது ‘சனாதன மாடல்’. தமிழ்நாட்டிலோ வேலை வாய்ப்புகளை வழங்குபவர்களை உருவாக்குகிறது, கழக அரசு. அதனால்தான் இது ‘திராவிட மாடல்!’

➢ 2021-ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி 2,300 ‘ஸ்டார்ட் அப்’ நிறுவனங்கள்தான் இருந்தன. நம் கழக அரசு வந்த பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை 6,800 க்கும் மேல் உயர்ந்திருக்கின்றன.

➢ புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, மாநிலத்தின் எல்லாப் பகுதிகளையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், மதுரை, ஈரோடு, திருநெல்வேலி, சேலம், ஒசூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும் ‘வட்டார புத்தொழில் மையங்கள்’ நிறுவப்பட்டுள்ளன.

➢ நமது திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகுதான், ஒன்றிய அரசின் ‘ஸ்டார்ட் அப் இந்தியா’ அமைப்பு வழங்குகிற ‘லீடர்’ அங்கீகாரம் தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது.

➢ புத்தொழில் முனைவோர்களுக்கு, உலகளாவிய முதலீடு மற்றும் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடு, உலக வர்த்தக மையமாக மாறிவரும் துபாயில், ஒருங்கிணைப்பு மையம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

➢ இதுவரை 117 நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சம் வீதமும், பசுமைத் தொழில்நுட்பம், ஊரக வாழ்வாதார மேம்பாடு, பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்கள் ஆகிய 15 நிறுவனங்களுக்கு ரூ.15 லட்சமும் ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளன.

➢ பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினரால் நடத்தப்படும் 21 நிறுவனங்களுக்கு 28.10 கோடி ரூபாய் பங்கு முதலீடாக வழங்கப்பட்டுள்ளன.

**...சாதனை தொடரும்**

## சனாதனத்தின் சாட்சிகள்!



கடவுளை வணங்குபவர்கள், சாதி அடுக்கில் மேல் இருப்பவர்கள் என்றாலும், பெண்களுக்கு சனாதன தர்மத்தில் இரண்டாம் இடம்தான். அதிலும் கணவனை இழந்த பெண் என்றால், அவர்களுக்கு சமூகத்தில் இடமே இல்லை என்றுதான் சனாதனம் வகுத்துள்ளது. அந்தப் போக்குகள் தமிழ்நாட்டில் ஒழிக்கப்பட்டதுதான் இப்போது இந்தியா முழுவதும் பேசுபொருளாக மாறியுள்ளது. இந்த நிலையில், மத்திய பிரதேச மாநிலம் பன்னா மாவட்டத்தில் நடந்த சம்பவம் சனாதனத்தின் கோரமுகத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அந்தப் பகுதியின் அரச வம்சாவழியைச் சேர்ந்தவர் ஜிதேஸ்வரி. கணவனை இழந்த இவர், சமீபத்தில் வழிபாட்டுக்குச் சென்றபோது அந்தக் கோயிலின் அர்ச்சகர்கள் அவரை வழிபட விடாமல் தடுத்து, வெளியேற்றியுள்ளனர். அதுமட்டுமில்லாமல் மதவழிபாட்டுக்கு எதிராக அவரது செயல் உள்ளதாக அவர் மீது வழக்கும் பதியப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அவர் வெளியேற்றப்படும் வீடியோ வெளியாகி, சனாதனத்தை ஏன் ஒழிக்க வேண்டும் என்பதற்கு சாட்சியாக உலவுகிறது.

## :ப்ளாஷ்பேக்





ரவிச்சந்திரன்

### மேம்பாலத் திறப்புவிழா!

1975-ஆம் ஆண்டு, வேலூர் மாவட்டம், செங்கம் நகரில் அரசு மருத்துவமனை மற்றும் செய்யார் ஆற்றின் மீது கட்டப்பட்ட மேம்பாலத்தை அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் திறந்து வைத்தார். அதற்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் சிறப்புரையாற்றினார். மேலும், அன்றைய சுகாதார துறை அமைச்சர் சாதிக் பாட்சா, தொழில் துறை அமைச்சர் ப. உ. சண்முகம், ஒன்றிய செயலாளர் கே.பி.குப்புசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். அப்போது, செங்கம் நகரின் கழகச் செயலாளராக இருந்த என் தந்தை இரா.பரசுராமன் மேடையில் தலைவருக்குப் பின் நிற்கும் காட்சி. 1971-1976 கால கட்டத்தில் கட்டப்பட்ட மேம்பாலங்களில் செய்யார் மேம் பாலமும் ஒன்று.

**-ப.ரவிச்சந்திரன், ஊடகவியலாளர், செங்கம், வேலூர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ராஜமன்னார் குழு!

**1969-ஆம் ஆண்டு, ஒன்றிய அரசு – மாநில அரசுக்கு இருக்கும் அதிகாரங்கள் குறித்து, ஆராய உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ராஜமன்னார் தலைமையில், ஒரு குழு அமைத்தார் கலைஞர். ஒன்றிய அரசிடம் உள்ள அதிகாரங்கள் எவையெவை மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும்; எவையெவை நீக்கப்பட வேண்டும் என்பது போன்ற விரிவான விவரங்களை ஆராய்ந்து, இந்தக் குழு அறிக்கை அளித்தது. ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி’ என்கிற முழக்கத்தை நடைமுறைப்படுத்த எடுக்க வேண்டிய முதற்கட்டப் பணியாக அந்தக் குழு அமைக்கப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 237




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131